
**இதழ் 164**

2014

பங்குனி / சித்திரை
March / April

கல்வி கலை இலக்கிய
சமூக இருமாத இதழ்

# எஸ்.எம்.ஜி - சிறப்புச் மலர்.




## மூத்த ஊடகவியலாளர்:
# எஸ்.எம்.கோபாலரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Skantha





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhovel 18A
47249 Duisburg-Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de



வங்கிவிபரம்:
Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து

நல்லிணக்கத்துக்கு அத்திபாரமிடுதல் உலக நாடுகளில் முரண்பாடுகளை அடிக்கடி தோற்றுவிக்கின்ற காரணியாக மதம் இருந்து வருகின்ற அதே சமயம் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துவதற்கு மிகப் பெறுமதியானதாகவும் மதம் விளங்குகின்றது என்பதை மறுத்துவிட முடியாது. அத்துடன் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கான அத்திபாரத்தையும் மதத்தினால் வழங்க முடியும். முரண்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கும் அதனை முகாமைத்துவப்படுத்தி தீர்வொன்றை எட்டுவதற்கு காத்திரமான பங்களிப்பை மதங்களினால் வழங்க முடியும். இலங்கையில் பெரும்பான்மை சிங்கள மக்களினால் கடைப்பிடிக்கப்படும் பௌத்த மதமும் தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையினர் கடைப்பிடிக்கும் இந்து மதமும் இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும். மத ரீதியான கட்டமைப்புகள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்களின் நலன்களிலேயே அதிகளவுக்கு கரிசனைகளை வெளிப்படுத்தி வந்தமையே இனக்குழமங்கள் , மதக் குழமங்களிடையே தேசிய நல்லிணக்கத்தை கனதியான முறையில் கட்டியெழுப்ப முடியாமைக்கான காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்நிலையில் பௌத்த மதத்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரிய பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் உடுகம சிறி புத்தரகித்த தேரர் யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் பயணம் மேற்கொண்டு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலசிறி சோமசுந்தர பரமாச்சாரியரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளமையும் அவர்களை கண்டி தலதா மாளிகைக்கு வருகைதருமாறு அழைப்பு விடுத்துள்ளமையும் சிறப்பான விடயமாக தோன்றுகிறது. தென்னிலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் உட்பட சகல தரப்பினரினதும் பெருமதிப்புக்குரிய மகாநாயக்க தேரர்களிடம் ஆசீர்வாதம் பெறுவதற்கு செல்வோரிடம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை , நல்லிணக்கம் குறித்துப் போதிக்குமாறு நல்லூர் ஆதீன கர்த்தா கேட்டுக் கொண்டிருப்பதும் அதற்குப் பதிலளித்திருக்கும் அஸ்கிரிய பீட மகா நாயக்க தேரர் இந்துக்களும்பௌத்தர்களும் ஒன்றிணைந்து விசேடமாக இரு மதங்களையும் சேர்ந்த குருமார் ஒன்று சேர்ந்து மாற்றத்தை ஏற்படுத்த முடியுமெனக் கருத்து தெரிவித்தமையும் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியவிடயமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதேசமயம் பௌத்த , இந்து , இஸ்லாம் , கிறிஸ்தவ மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதி உயர் பீடமொன்றை ஏற்படுத்தி சந்தேகங்களை களைவதற்கும் நம்பிக்கையையு,ம் புரிந்துணர்வையும் கட்டியெழுப்புவதற்கும் முயற்சிகளை முன்னெடுக்க முடியும் . வாய்ப்புகளில் சமத்துவம் , நலிந்தவர்கள் மீதான பரிவிரக்கம் , கடந்த காலத் தவறுகளை சீர்படுத்தல் போன்றவை மூலம் இனங்களுக்கிடையில் அவசியமாகத் தேவைப்படும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும். சர்வமத பேரவை போன்றவை இதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதேசமயம் மகாநாயக்க தேரர்கள் உட்பட சகல மதங்களையும் சேர்ந்த உயர் மட்ட குருமார்களின் அங்கீகாரம் பெற்ற உயர்பீடமொன்றை அமைப்பதன் மூலம் பல்வேறு தடைகளைத் தாண்டி நல்லிணக்க இலக்கை எட்ட முடியும். கடந்த காலத்தை எங்களால் மாற்றிக் கொள்ள முடியாது. ஆனால் எமது போக்கை மாற்றிக்கொள்ள முடியும்.

குற்றப் பழியை வேருடன் களைந்து மன்னித்து மறந்து விடுவதை உள்வாங்கிக் கொள்ளுமாறும் அகந்தையை ஒழித்து பணிவை உள்ளீர்க்குமாறும் வெறுப்புக்கு பதிலாக அன்பைப் பரிமாறிக் கொள்ளுமாறும் இவற்றின் மூலம் நிகழ்காலத்தை சௌகரியமானதாக்கிக்கொள்ள முடிவதுடன் எதிர்காலத்திற்கான நம்பிக்கையை ஏற்படுத்த முடியுமென்ற சிந்தனையை சகல மதங்களும் போதிக்கின்றன. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் மதத் தலைவர்களும் மத அமைப்புகளும் பல்வேறு வழிகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய பல்வேறு சந்தர்ப்பங்கள் உலகின் பாகங்களில் தோன்றியிருந்தன. யுத்தம் முடிவடைந்து 5 வருடங்களை கடந்து கொண்டிருக்கும் நிலையிலும் இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை போதிய அளவுக்கு ஏற்படுத்தாமல் இருப்பது துன்பியலாகும். இனங்களுக்கிடையிலான தப்பபிப்பிராயம் , மேலாதிக்கவாத சிந்தனைகள் , பாரபட்சம் போன்றவற்றை இல்லாமல் செய்துவிடுவதற்குப் பதிலாக அதற்கு உரமூட்டி வளர்த்து அரசியல் அனுகூலம் பெற முயற்சிப்போரின் மனித நேயமற்ற எண்ணப்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு இதயசுத்தியுடன் முயற்சிப்பதன் மூலம் நல்லிணக்கம் என்ற பிரதான இலக்கை எட்ட முடியும். அதேசமயம் இதய சுத்தியின்றி உடனடி தேவைப்பாடுகளின் நிமித்தம் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கம் ஒருபோதும் நிரந்தரமானதாக அமையமாட்டாது.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் வட்டம்



## பேராசை பெரு நட்டம்.

ஒரு சமயம் பலத்த மழை பெய்துகொண்டிருந்தது எங்கும் வெள்ளம் கரைபுரண்டோட மக்கள் தத்தளித்தனர். பலர் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். மக்களைக்காப்பாற்ற ஒரு படகு அனுப்பப்பட்டது. ஒவ்வொருவரும் தாம் உயிர் தப்பினால் போதும் என்று தம் பொருட்களையெல்லாம் துறந்து படகில் ஏறினர். பண ஆசையுள்ள ஒருவன் வெள்ளம் திரண்டு வருவதைக் கண்டதும் முதலில் தனது பணத்தை எல்லாம் துணியில் வைத்துத் தன் இடுப்பில் கெட்டியாகக் கட்டிக்கொண்டான். அதன் பின் அவனும் படகில் ஏறினான்.

படகு நீரில் சென்றுகொண்டிருந்த போது சூறாவளிக் காற்று வீசியது. படகு கவிழ்ந்துவிட்டது. நீச்சல் தெரியாதவர்கள் நீரில் மூழ்கிவிட்டனர். தெரிந்தவர்கள் கரையை நோக்கி நீச்சல் அடித்துக்கொண்டிருந்தனர். பண ஆசை பிடித்தவன் நீச்சல்வீரன் என்று புகழ்பெற்றவன். எனினும் அவன் இடுப்பில் பணம் இருந்தபடியால் வேகமாக நீந்தமுடியாமல் திணறினான். அருகில் நீந்திக்கொண்டிருந்தவர்கள் இடுப்பிலுள்ளதை அவிழ்த்துவிடு உயிர் தப்பலாம் என்றனர். ஆனால் அவன் பணத்தை இழக்கச் சிறிதும் விரும்பவில்லை. இடுப்பில் கனம் அதிகமாகவே அவன் நீந்தமுடியாமல் கஷ்டப்பட்டு இறுதியில் நீருக்குள் மூழ்கினான். ஆபத்தில் அவன் பணம் அவனைக் காப்பாற்றவில்லை. அவன் உயிருக்கு அதுவே எமனாக அமைந்துவிட்டது. ஆகவே இக்கதையின் மூலம் பேராசையால் உயிர் இழந்த சம்பவத்தை நாம் அறிந்துகொள்கிறோம். பேராசை பெரு நட்டம். ஆசையே நம் துன்பத்தின் மூலகாரணம்.

செல்விஇகீர்த்தனா
நீத் மிஷின் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்

## நன்றி மறவேல்.

குழந்தைகளாகிய உங்களை வளர்த்தது யார்!.. உங்களுக்கு ஆடைகளையும், பசிக்கும்போது உணவையும், தூக்கம் வரும்போது தாலாட்டுப் பாடிக் கதை சொல்லியும் தூங்கப் பண்ணியது யார்!.. பெரியவர்களானதும் உங்களை அறிவாளியாக்க பள்ளிக்கு அனுப்பிக் கல்வி கற்பதற்கான ஏற்பாடு செய்தது யார்!.. உன் பெற்றோர்களான தாயும் தந்தையும் தானே!.. உன்னை அறிவாளியாக்க கல்வி புகட்டுவது ஆசிரியர். உனக்குக் கஷ்டம் வரும்போது ஆறுதல் கூறி, உதவி தேவையானால் செய்கிறவன் யார்!.. உன் உயிர்த் தோழன் அல்லவா!.. இத்தகையவர்களை நீங்கள் உங்கள் வாழ்நாளில் மறக்கவே கூடாது. உனக்கு உபகாரம் செய்தவர்களை நீ மறக்காதே. கூடாது என்கிறது ஆத்திசூடி.

## பருவத்தே பயிர் செய்.

உழவர்கள் நிலத்தை எப்போது உழவார்கள் தெரியுமா!..மழைக்காலத்தில் மழைபெய்யும் சமயத்தில் நிலத்தை உழது பண்படுத்தித் தயாராக வைத்திருப்பார்கள். மழை பொழிய ஆரம்பித்ததும் விதைகளைத் தூவி நாற்றங்காலிட்டு நடவு நட்டு எருப்போட்டுப் பயிர் செய்வார்கள். மாரிக்காலத்தில் தான் ஏரி, குளம், ஆறு, குட்டைகளில் தண்ணீர் நிரம்பி இருக்கும். அவற்றின் நீரை வயலில் பாய்ச்சிப் பயிர் செய்வதற்குரிய பருவம் அதுதான். கோடையில் நீர் நிலைகள் காய்ந்து கிடக்கும். அது பயிர்த்தொழில் செய்வதற்கான காலமல்ல. இந்த நியதி உழவர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்தான். எந்தக் காரியத்தையுமே அக்காரியத்தைச் செய்வதற்கான பருவத்தில் செய்ய வேண்டும். பருவத்தே என்றால் ஏற்ற காலத்தில் என்று பொருள்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பே செல்வம்.

உழவர் ஒருவருக்கு மூன்று மகன்கள் இருந்தனர். இவர்கள் மூவருமே மகா சோம்பேறிகள். ஆண்டுகள் பல ஓடின. முதுமையடைந்த உழவன் இறக்கும் நிலையில் இருந்தார். அப்போது ஒருநாள் தன் மகன்களைப் பார்த்து" நானும் உங்களைத் திருத்த எவ்வளவோ முயற்சி செய்துவிட்டேன் நீங்கள் சோம்பேறிகளாகவே இருக்கின்றீர்கள். நான் இப்பொழுது இறக்கும் தறுவாயில் இருக்கின்றேன் எனது நிலத்தில் ஒரு புதையல் உள்ளது அதை எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டுச் சில நாட்களின்பின் இறந்துவிட்டார்.

புதையலை எடுக்கும் ஆசையில் உழவனின் மகன்கள் மூவரும் படாதபாடுபட்டு நிலத்தைத் தோண்டினார்கள். ஆனால் ஒன்றுமே அங்கு இருக்கவில்லை. மூன்று மகன்மாரும் தந்தையின் நண்பரான ஆறுமுகத்தின் வீட்டிற்குச் சென்று நடந்ததைக்கூறினார்கள். அதற்கு அவர் நிலத்தைத்தான் தோண்டிவிட்டீர்கள் நெல் மணிகளை விதையுங்கள் நெல்விளையும் காலம் இது உங்களுக்குப் பயன் கிடைக்கும் என்றார். மூவரும் வேண்டா வெறுப்புடன் நெல்லை விதைத்தார்கள். அந்த ஆண்டில் தவறாது மழையும் பெய்தது. ஊரிலேயே அவர்கள் நிலத்தில்தான் நல்ல விளைச்சல். அறுவடைசெய்த அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். அப்பொழுதுதான் தந்தை சொன்ன புதையலின் பொருள் புரிந்தது. எனவே நமக்கு உழைப்பைப்போல் எதுவும் உற்ற துணை கிடையாது என்னும் பாடத்தைக் கற்றுக்கொள்ளுவோம்.

செல்விகதர்சிகா
நீத்
மிஷின் – கிளிநொச்சி.

தகவல்: –

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாகவும் ஆசிய வரலாற்றில் முதல் தடவையாகவும் சர்வதேச இளைஞர் திருவிழா இவ்வருடம் 2014 மே மாதம் 11ம் திகதி தொடக்கம் 15ம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கமுடைமை.

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ஒழுக்கமுடையார். எல்லாமுடையார். ஒழுக்கங்களாவன கொல்லாமை, கள்ளாமை, பிறர்வசை உரையாமை, பிறர்பொருள் கவராமை, தாழ்மை, பொய்யுரையாமை முதலியனவாகும். எக்கருமத்தையும் செய்யும் போதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும், மன மகிழ்சியோடும் செய்து பழகுதல் வேண்டும. அப்படிச் செய்து பழகிவந்தால் மன உறுதி உண்டாகும். அதாவது நமது மனம் நல்ல சித்தத்தைப் பெறும். இதனால் நமது ஆத்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு நமது மனதில் புகுந்து கவலையை உண்டாக்காது. எல்லாம் என்னிடத்திலே உண்டாகின்றன. எல்லாம் என்னிடத்திலே நிலைத்திருக்கின்றன, எல்லாம் என்னிடத்திலே ஒடுங்குகின்றன, என்ற தூய்மையான எண்ணம் உடையவராய் இருத்தல் வேண்டும். மேலும் எனக்கொரு குறையுமில்லை, என்னிடத்தில் எல்லோரும் அன்பாய் இருக்கிறார்கள், நானும் எல்லோரிடத்திலும் அன்பாய் இருக்கிறேன் என்று அடிக்கடி நினைத்து... நினைத்துச் சாதிக்க வேண்டும். இப்படியே இடைவிடாமல் பழகிவந்தால் எல்லாம் அறியும் ஆற்றலும் எல்லாம் செய்யும் வல்லமையும் எளிதில் கைகூடிவிடும்.

## அன்பான வேண்டுகோள்!.

மண்சஞ்சசிகையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சிறுவர் போட்டிகளான குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடைப் போட்டி, கண்டுபிடியுங்கள் போட்டிகளில் பங்குபற்றும்மாணவர்களின் எண்ணிக்கைகுறைவடைந்துவருவதை வேதனையுடன்சுட்டிக்காட்டுகின்றோம்!...மாணவமணிகளின்தாய்மொழிக் கல்வி,எழுத்தாற்றல்,சிந்தனையாற்றல், அறிவியல்விடையங்களில் மேம்படவேண்டும்என மண்சஞ்சிகை பல ஆண்டுகளாக எடுத்துவரும் செயற்பாடுகளுக்குநீங்கள் கொடுத்துவரும் ஒத்துழைப்புக்கள்ஆதரவுகள் குறைவடைந்துவருவதால் இந்த மூன்று போட்டிகளையும் தொடர்ந்துநடத்துவதா!..என்னும்கேள்வி எழுந்துள்ளது. பங்குகொள்ளும்மாணவமணிகளின்எண்ணிக்கைகுறைவடைந்துள்ளதால் போட்டிகளை நிறுத்தவேண்டியகாலகட்டத்தில்உள்ளோம். எனவே அடுத்துவரும காலங்களில் போட்டிகளில்கலந்துகொள்ளும்மாணவ மணிகளின் எண்ணிக்கை குறித்து முடிவெடுக்கப்படும்.ஆகவேபெற்றோர்களும் மாணவர்களும் ஆக்கமும் ஊக்கமும் எடுத்து ஆதரவும்ஒத்துழைப்பும்வழங்கிபயன்படும்வண்ணம்அன்போடு கேட்டுகொள்கின்றோம்!..

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1. இறக்கை இல்லாத பறவையின் பெயர் என்ன.
2. நீந்தத் தெரியாத மிருகம் எது.
3. பறவை இனங்களில் மிகப்பெரிய பறவை எது.
4. பறக்கமுடியாத பறவை எது.
5. இலங்கையில் தலதா மாளிகை அமைந்துள்ள நகரம் எது.
6. இருண்டகண்டம் என்று அழைக்கப்படு கண்டம்.
7. பற்றைவீடு என அழைக்கப்படும் நாடு எது.
8. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது.
9. சுவாசிப்பதற்கு உதவும் வளியின் கூறு எது.

விடைகள் –

1. கிவிப்பறவை 2. ஒட்டகம் 3. தீக்கொழி 4. பென்குயீன்
5. கண்டி 6. ஆபிரிக்கா 7. அவுஸ்திரோலியா 8. நோர்வே 9. ஒட்சிசன்

## தகவல் துளிகள்.

1. ஆசுகவி என்று அழைக்கப்படும் ஈழத்துக் புலவர் கல்லடி சு.வேலுப்பிள்ளை.
2. புலவர்மணி எனப் போற்றப்படுபவர் அ.பெரியதம்பிப்பிள்ளை.
3. தமிழ்ச்சிறுகதை இலக்கியமேதை எனப்போற்றப்படுபவர் புதுமைப்பித்தன்.
4. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டவர்-ஜி.யு.போப் பாதிரியார்.

செல்விஇகீர்த்தனா.
ரீத்
மிஷின் – கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

1. வணங்கவேண்டியவர்கள் - தாய், தந்தை.

2. வந்தால் போகாதது - புகழ், பழி.

3. போனால் வராதது - இளமை, முதுமை.

4. நம்முடன் வருவது - பாவம், புண்ணியம்.

5. அடக்க முடியாதது - பசி, தாகம்.

6. பிரிக்கமுடியாதது - பந்தம், பாசம்.

7. அழிவைத் தருவது - பொறாமை, கோபம்.

8. சமமானது - பிறப்பு, இறப்பு.

9. வருவதும் போவதும் - இன்பம், துன்பம்.

10. மிக நல்லநாள் - இன்று.

11. மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு.

12. மிக வேண்டாதது - வெறுப்பு.

## அறிவுக்கு விருந்து.

1. அமெரிக்கா என்னும் புது உலகைக் கண்டுபிடித்தவர்..
   கிறிஸ்டோப்பர் கொலம்பஸ்.
2. தென்னாபிக்காவின் நன்னம்பிக்கைமுனையைக் கண்டுபிடித்தவர்..
   பார்த்தலோமியோ டயஸ்.
3. மிசிசிப்பி நதி சமவெளியைக் கண்டுபிடித்தவர் - ஜொக்யாஸ் கார்டியர்.
4. பிறேசில் நாட்டைக் கண்டுபிடித்தவர் - கப்ரால்

செல்வியநிவேதாநீத்
மிஷின் – கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்வோம்

1. இணையத்தளத்தில் உபயோகிக்கப்படும் WWW என்ற எழுத்துக்களின் விரிவாக்கம்.

2. நாயைவிட அதிகம் மோப்ப சக்தி கொண்ட உயிரினம்.

3. சுமார் 55 ஆயிரத்துக்கம் அதிகமான ஏரிகளைக்கொண்ட நாடு.

4. சீனாவின் பழங்காலப் பெயர்.

5. வாகனங்களில் எண் முறையை பதிவுசெய்த முதலாவது நாடு.

6. பனிச்சிறுத்தைகள் இந்தியாவில் எங்கு காணப்படுகின்றன.

7. யானையின் துதிக்கையில் எத்தனை தசைநார்கள் உள்ளன.

8. சிப்பியில் முத்து விளைய எத்தனை ஆண்டுகள் எடுக்கும்.

9. லிபியா நாட்டின் தேசியக் கொடி என்ன நிறம்.

10. ஜப்பான் நாட்டு மயில்கள் இடும் முட்டையின் நிறம் என்ன.

11. ஒட்டகம் எவ்வளவு நிறையைச் சுமந்து செல்லும்.

விடைகள்: –

1. World Wide Web என அழைக்கப்படும்
2. விலாங்குமீன்
3. பின்லாந்து
4. கதாய்
5. பிரான்ஸ்
6. இமயமலைச்சாரலில்
7. சுமார் 4லட்சம்
8. 15 ஆண்டுகள்
9. வெறும் பச்சை நிறம்
10. சிவப்பு
11. சுமார் 300 கிலோ

செல்விஎஸ்எஸ்தர்
ரீத் மிஷன் – கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

1. அழவேன் சிரிப்பேன் அனைத்தும் செய்வேன் நான் யார்..

2. ஆடும்வரை ஆட்டம் ஆடியபின்னர் ஓட்டம் அது என்ன..

3. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்..

4. ஊரெல்லாம் ஒளிவிளக்கு அதற்கு ஒருநாள் ஓய்வு அது என்ன..

5. செம்பு நிறையக் கம்பு அது என்ன..

6. தலையைச் சீவினால் கண் திறக்கும் அது என்ன..

7. நாலு கால் உண்டு வீடு வாசல் இல்லை அது என்ன..

8. பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள் அது என்ன..

9. மண்ணுக்குள் கிடப்பவன் மங்கலகரமானவன் அவன் யார்..

10. தட்டுவீட்டுக்குள் முத்துப் பலகை அது என்ன..

விடைகள்: –

1. முகம்பார்க்கும் கண்ணாடி
2. இருதயம்
3. தேள்
4. நிலா
5. மாதுளம்பழம்
6. இளநீர், நுங்கு
7. நாற்காலி கதிரை
8. சீப்பு
9. மஞ்சள்
10. நாக்கு

சகோதரிகிளாடிஸ் – ஜெ
ரூத்
மிஷன் – கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி முடிவு - 154
## (தை - மாசி 2014)

1. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியின் பெயர் என்ன..
உலகின் முதல் பெண் பிரதம மந்திரியின் பெயர் என்ன..
டி.எஸ்.செனநாயக்கா - ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா.

2. வடமாகாணத்திலுள்ள பிரதான நீர்ப்பாசனக் குளங்களில் இரண்டு குளங்களின் பெயர்களை எழுதுக..
இரணைமடுக்குளம் (கிளிநொச்சி) - கட்டுக்கரைக்குளம் (மன்னார்)

3. கடந்த 5-12-2013ம் தேதியன்று காலமான உலகத்தலைவர்களில் ஒருவரான நெல்சன் மண்டலே..
எந்த நாட்டின் தலைவராக இருந்தவர் - தென்னாபிரிக்கா
எத்தனை ஆண்டுகள் சிறையில் வாழ்ந்தவர் - 27 வருடங்கள்
இவருக்கு சர்வதேச நோபல் பரிசு கிடைத்த ஆண்டு - 1993

4. எழுத்துக்கள் மாறியிருக்கும் நாடுகளைக் கண்டுபிடித்துச் சரியாக எழுதுக..

| | | | | |
|---|---|---|---|---|
| - யாதிஇந் | - லங்கைஇ | - மனிர்ஜே | - றேபில்சி | - யன்பாப் |
| இந்தியா | இலங்கை | ஜேர்மனி | பிறேசில் | யப்பான் |
| - லிதாத்இ | - கிஎதுப் | - டான்சூ | - னகடா | - ர்வேநோ |
| இத்தாலி | எகிப்து | சூடான் | கனடா | நோர்வே |

5. ஒத்தகருத்து....... எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக......

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு | - வருடம் | குளிர் | - சூடு |
| மணம் | - வாசம் | வீடு | - காடு |
| விந்தை | - அதிசயம் | இனிப்பு | - உறைப்பு |
| சூரியன் | - ஆதவன் | கேள்வி | - பதில் |
| ஆரம்பம் | - தொடக்கம் | சந்தோஷம் | - கோபம் |

6. பின்வரும் சொற்களை பிழை திருத்தி எழுதுக..

| | | | | |
|---|---|---|---|---|
| கோளி | அறிசி | பம்பறம் | உனவு | சிருவன் |
| கோழி | அரிசி | பம்பரம் | உணவு | சிறுவன் |
| நன்பன் | எலுத்து | அன்னா | நுாழகம் | விலையாட்டு |
| நண்பன் | எழுத்து | அண்ணா | நுாலகம் | விளையாட்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி இல - 155

1. இலங்கையிலுள்ள 9 மாகாணங்களில்நிலப்பரப்பில் பெரிய மாகாணம்எது
-----------------
-வட-கிழக்கு மாகாணத்தில் நிலப்பரப்பில் மிகப்பெரி மாவட்டம் எது.
-----------------

02. இலங்கையில் மலையகத் தமிழர் அதிகமாக வாழும் நான்கு இடங்களின் பெயர்களை எழுதுக..

--------------- ------------ ----------- -----------

03. ஐரோப்பாவில் கடலால் சூழப்படாத நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக..

--------------- -------------- ----------- ------------

04. உலகில் தற்போது போர், உள்நாட்டுப் போர் நடைபெற்றுவரும் நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக..

05. மரம், பூ, காய், பழம் என்பவற்றின் பெயர்களை எழுதுக..

| | | | | |
|---|---|---|---|---|
| உதாரணம்:- | மா, | மாம்பூ, | மாங்காய், | மாம்பழம் |
| | வேம்பு. | ------- | ------- | -------- |
| | பனை | ------- | ------- | -------- |
| | வாழை | ------- | ------- | -------- |
| | புளியமரம் | ------- | ------- | -------- |

06. உங்களுக்குத் தெரிந்த ஐந்து எழுத்துச் சொற்கள் எட்டு எழுதுக..

---------- ------------ ----------- -----------
---------- ------------ ----------- -----------

07. நீங்கள் விரும்பிய திருக்குறள் ஒன்றையும் அதன் பொருளையும் எழுதுக..

முடிவு திகதி: 15.04.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி முடிவு – 80
## (தை – மாசி 2014)

| | | | |
|---|---|---|---|
| தி | ங் | க | ள் |
| ட் | டி | ட் | வ |
| ட | அ | ம் | மா |
| ம் | லை | ன் | மா |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி இல – 81
## (பங்குனி – சித்திரை 2014)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

**இ–வ:-**

01–04 உலகில் இவர்களுக்கும் ஒரு தினம் கொண்டாடப்படுகின்றது.

10–11 நாம் வாழும் இல்லம் ஒத்தசொல்.

**வ–இ:-**

08–05 சில மாணவர் இதை நன்றாக எழுதுவார்கள்.

12–11 உலகில் இது அழிக்கப்படுவதால் மழை குறைவாகப் பெய்கின்றது

**கீ–மே:-**

13–05 இந்த மிருகம் நின்றுகொண்டும் தூங்குமாம்.

15–11 பெண்கள் அணிவார்கள்.

**மே–கீ:-**

03–11 இனிப்பான தின் பண்டம்

10–14 இசைக்கருவி ஒன்று

12–16 பணம்..இப்படியும் ஒரு பெயர் உண்டு.

முடிவு திகதி: 15. 04. 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் போட்டி முடிவுகள்.

## பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்.

செல்வி. நந்தனா.கனகராசா - Monchengladbach
செல்வி. சாதனா.தேவானந்தராசா - Monchebgladbach
செல்வி. கார்த்திகா.இராசமணி - Berlin
செல்வி. வாசுகி.ஜெயராசா - Swiss
செல்வி. அபிராமி.பரமானந்தன் - Weeze
செல்வி. சாகித்தியா.சண்முகரட்ணம் - Weeze

செல்வன். சாகித்தியன்.சண்முகரட்ணம் - Weeze
செல்வன். நிகேதன்.சண்முகரட்ணம் - Weeze
செல்வன். சிந்துாரன்.சிவமணி - Holland
செல்வன். ராகுல்.கனகராசா - Monchengladbach
செல்வன். பானுஸ்கந்தா.புவனேந்திரன் - Duisburg
செல்வன். பவிதன்.அருமைத்துரை - Wiesloch
செல்வன். ஆதவன்.அருமைத்துரை - Wiesloch

## பரிசுபெறும் அதிஸ்டசாலிகள்...

செல்வி. கார்த்திகா.இராசமணி - Berlin
செல்வன். சிந்துாரன்.சிவமணிமணி - Holland
செல்வி. வாசுகி.ஜெயராசா - Swiss

போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மணிகளுக்கும் பாராட்டுக்களும்..வாழ்த்துக்களும்!..தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குகொள்ளுங்கள்!... பரிசுகளை வென்றிடுங்கள்!..

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

## விருந்தோம்பல்

81. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

83. வரவிருந்து வைகலும் ஒப்புவான் வாழ்கஇகை
பருவந்து பாழ்படுதல் இன்று

84. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்

85. வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்

86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

87. இனைத்தணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்தணை வேள்விப் பயன்

88. பரித்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்

89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு

90. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

## விருந்தினரை உபசரித்தல்

81. இல்வாழ்பவர் மனைவி மக்களுடன் கூடியிருந்து வாழும்செய்கை முழுவதும் விருந்தினரை இனியமுகத்துடன் வரவேற்று உபசரித்தலுக்காகவே ஆகும்.

82. தேவாமிருதமே ஆனாலும் தன்னை நாடி வந்தவர் வெளியே இருக்கத் தான் மட்டும் அதை உண்பது ஏற்றதல்ல.

83. தன்னை நாடிவந்த விருந்தினரை நாள் தோறும் உபசரிப்பவன் வாழ்க்கை வறுமையுற்று வருந்திக் கெடுவது இல்லை.

84. இனிய முகத்துடன் தக்க விருந்தினர்களை உபசரிப்பவன் இல்லத்தில் திருமகள் மனம் மகிழ்ந்துவாழ்வாள்.

85. வரும் விருந்தினரை(முதலில்) உண்ணச்செய்து மீதம் உள்ளதைத் தான் உண்பவன் தேவர்களின் விருந்தினனாவான்.

86. தன் இல்லத்திற்கு வந்த விருந்தினரை உபசரித்துப் பின்னால் வருபவரை எதிர்பார்த்து அவருடன் உண்பவன் தேவர்களின் விருந்தினனாவான்.

87. விருந்தோம்புதலாகிய நோன்பின் பயன் இவ்வளவின தென்னும் அளவுடையது அல்ல விருந்தினரின் தகுதியே அதற்கு அளவாகும்.

88. விருந்தினரை அன்புடன் உபசரித்து நோன்பின் பயனை அடையாதவர் பொருள் ஒன்றையே காத்துப் பின் தரித்திரராய்த் தமக்கு உதவத் துணை அற்று வருந்துவதா.

89. செல்வம் உள்ள காலத்தில் ஏழ்மை என்பது விருந்தினரை உபசரிக்காததேயாகும். அது பேதையரிடம் உள்ள குணமாகும்.

90. அனிச்ச மலர் நுகர்ந்த அளவில் வாடிவிடும். விருந்தினரோ முகம் மாறுபட்டுப் பார்த்தாலே வாடிவிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனியில் பங்குநீயாகு!

தோழிகளே பாங்கியர்களே துருவநட்சத்திரங்களாய் நாமாவோம்
தோன்றுகின்ற இருளகற்றிடவே துலங்கிடுகின்ற சுடர்களாவோம்
வாளினைப்போல் விழிகளென்று வரிவரியாய் வர்ணித்தவர்களுக்கு
வாளின் வலிமையெம் விழிகளென்று வரலாறுநாம் செய்திடுவோம்..!

நாளிகைகள் எல்லாவற்றையுமே நமக்கெனவே மாற்றிவைப்போம்
நன்மைகளையே படைத்திடவே நம்கரங்களை ஆக்கிவைப்போம்
ஏழில்கேது எட்டில்சனியென்பதை எடுத்தெறிந்து நிமிர்ந்துநின்று
ஏழதிவைத்த ஜாதகங்களைநாம் எமக்கென சாதகமாக்கிடுவோம்..!

தூளியில் தொட்டில்கட்டி தொடருகின்ற புனிதக்கலாச்சாரத்தினை
தூய்மையாய் போற்றிப்பேணும் தாய்மையினை காத்திடுவோம்
துளித்துளியாய் தேன்சேர்க்கும் தேனியின் உழைப்பை நாம்
துடிப்போடு கற்றுக்கொண்டு துணிவோடு நாம் உழைத்திடுவோம்...!

யாழிசையும் குழலிசையும் யௌவனத்திற்கு இனிமையெனில்
யாவரின் மகிழ்ச்சிக்காகவும் யாமொன்றாய்ப் பணிபுரிவோம்
தாளிசையின் இலக்கணமும் தற்காப்பினையும் பெற்றிடுவோம்
தமிழோடு பிறமொழியும் தளம்பிடாமல் கற்றுத்தேறிடுவோம்..!

ஆழிக்கும் அண்டத்துக்கும் அமைதிதோன்றிட நாமுழைப்போம்
அகிலத்தின் ஆக்கச்சக்திகள் அனைத்துமே நாமாயாவோம்
ஊழிக்கு முன்னால் இந்த உலகத்தையே மாற்றிவைப்போம்
உத்தமருடன் கைகோர்த்து உதவுமன்னை தெரேசாவாவோம்..!

நாளின்மேல் குறைசொல்லும் நாகரீகத்தையே மாற்றிடுவோம்
நடப்பவை யாவற்றையும் எமக்குநல்லதென்று ஏற்றிடுவோம்
கோளினைக் கண்டறியும் கூர்ஞானம் கொண்டவர்களாவோம்
குறள்வழியில் வாழகின்ற குலமாதர்காளாய் நாம்மிளிர்வோம்..!

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே!.

சுதந்திரம் என்பது சுந்தரமானது
சுகித்திடும் பொறுப்பு
உன்னதாகுது விதித்தது என்று
விழுந்துவிடாது துடித்தெழ
துன்பங்கள் தகர்த்திடு...
மதித்திடு மாண்புகள்
காத்திடு... மடமைகள் மறுத்து
மாத்திடு... கடமைகள் காத்து
உயர்ந்திடு... காசினி தன்னில்
நிலைத்திடு...அடுத்தவர் தன்னை
மறந்திடு... அனைத்தும் எனக்குள்
நினைந்திடு... மனதில் துணிவை
வளர்த்து மங்கா புகழை
நிறுத்து ஆடையும் மேடையுமல்ல
வாழ்வு அதற்கும் மேலேயுண்டு
தேடு... சரித்திர நங்கையர்
கண்டு சாதிப்போம் இமயமாய்
நின்று...

கீத்தா பரமானந்தன்

# பெண்ணிவள்!.

பெண்ணிவள்
மண்ணில் உதித்த மகத்தான
சக்தி கண்ணில் காட்டும்
கருணையின் பரிவு அள்ளி ச்
சொரியும் தாய்மையின்
ஊற்று எண்ணி எண்ணிரசித்திடும்
வியப்பு
தன்குலம் காத்திட தன்னையே
தருவாள்தன்னலம் மறந்து
மெல்லியள் இவளின் மேன்மை
கண்டு மேதினி தன்னை
பெண்ணாய் கொண்டார்
கண்ணிவள்
காலக்கொடுமையில்
கண்ணீர் அவலத்தில் மிதக்கிறாள்
குடும்பச் சுமையில் பாதியானவள்
இருட்டில் இருந்தே சுகந்தம்
வீசுறாள்இந் நிலம் இவளின்
ஈகை உணர்ந்து எப்போது
இவளுக்கு ஏற்றம் கொடுக்கும்
மண்ணிலே பெண்மையும்
மகிமை பெற்று மாண்புடன்
வாழும் மகிமை பெறணும்

கீதா பரமானந்தன்
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்.

பூமித் தாயும் தாங்கிடுவாள்
சுமையை தாங்கும் வரையும் தாங்கிடுவாள்
தாங்கமுடியா தரணத்தில் பூகம்பமாய் வெடித்திடுவாள்
பெண்ணாய் பிறந்தவள் பொறுத்திடுவாள்
பொறுமையின் சிகராமாய் விளங்கிடுவாள்
பொறுக்கமுடியா பொழுதினிலே
அவளும் பொங்கியே எழுந்திடுவாள்
கண்ணை இமை போல் காத்திடுவாள்
கலங்கரை விளக்காய் ஒளி தருவாள்
குலமகள் என்றே வாழ்ந்திடுவாள்
தன் குடும்பத்துகாக உயிர் கொடுப்பாள்
குற்றம் கண்டு மனம் நோகில்
கண்ணகியாய் அவள் எரித்திடுவாள்
பத்துமாதம் சுமப்பவளே பெண்
தன் இரத்தத்தை பாலாக்கி கொடுப்பவளும் அவளே
தாய் என்னும் பேரன்புப் பெட்டகமே
பெற்றவளாய் மேதினியில் பெருமை பெறுபவளே
சக்தியின் அம்சமே பெண் என்றால்
சிருஸ்டியின் மூலாதாரம் பெண் என்றால்
பெண்ணைப் போற்றிக் காக்க முடியாதோர்
மண்ணைக் காத்தும் பயன் என்ன?
அன்பின் வடிவே பெண்
பூமியில் சிருஸ்டியில் அவளே முதல்
உயிர்களின் மூச்சும் தருபவள் அவளே
பெண்ணே போற்றத்தக்கவள்
பெண்ணே உலகின் கண்

கவி. மீனா
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் நலம் பேணுவோம்.

உடலில் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ!..

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவாயேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!..

காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவாயின்
காலைத் தொட்டுக் கும்பிட்டு
காலன் ஓடிப் போவானே!..

கூழையே நீ குடித்தாலும்
குளித்த பிறகு நீ குடியப்பா
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா!...

அருமை உடலின் நலம் எல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே
வருமுன் நோயைக் காப்பாயே
வையகம் புகழ வாழ்வாயே!...

செல்வியநிவேதா
நீத் மிஷன் – கிளிநொச்சி.

## பெண்!.

மகளே!..
ஏணியிலே நீ ஏறி
உச்சத்தை தொடவேண்டும்
என் பெயர் கேட்பது போல
வான் அளவிற்கு -நீ
வளர வேண்டும் அன்பு மகளே!...

உயர்விலே ஆணுக்கு நிகராகலாம்
ஆனால் ஆணாக மாறஎண்ணாதே
என் தங்க மகளே
தாய்மையும் தாரமும் உன்
பெண்மைக்கே உரியது
தாழ்ந்து விடுவேன் என
தயக்கம் கொள்ளாதே
என் அருமைக் கண்மணியே!...

மகனை ஆணாகவே வளர்த்துவிடு
மகளைபெண்ணாகவேவளர்த்துவிடு
பேதமை என வளர்த்து விடின்
பிரளயமே வரும் வருங்காலத்தில்!..

உன்னதங்கள் உன் நிலையிலே
உயர்வும் போற்றுதலும் பெறுவாய்
ஒருபோதும் அதில் ஐயமில்லை
எனது செல்ல மகளே!...

கருமரன்.
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாவும் நீதானே!.

விடிகின்ற காலைப் பொழுதுகள்
நீ திரும்பி வந்தபின்
உனக்காகவே சேவை செய்வதாய்
எனக்குள் நானே செய்துகொண்ட
சத்தியங்கள் சக்தியற்றுப் போயின!...

திரும்பி வராமலே நீ உன் நோயால்
உயிரை மாய்த்துக் கொண்டாய்
உன் கதைகள் அப்போது
கன்னங்களில் கண்ணீர்
வழியும்போது காரணம் கேட்பேன்!...

தனிமைப் படப்போகும் - என்
நிலைமையை மேலாகச் சொல்வாய்
அம்மா...உன் ஆத்மாவிலிருந்து
நான் ஒருபோதும்
பிரிந்திருக்கவே மாட்டேன்!..

ஆனால் என்னால்
அதனை அறியமுடியாமல்
விட்டு விட்டேன் - அம்மா
என் அனைத்தும் நீ
ஆத்மாவும்!.. நீ தானே!...

திருமதிஜெயாநடேசன்
ஜேர்மனி.

# சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

மண் சஞ்சிகையின் வாசகப் பெருமக்களுக்கு இனிதான சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகிதங்கள்!.

மனதின் உணர்வை மகிழ்வின் பகிர்வை
வாழ்வின் வீச்சை வரியாய் தாங்கி
எழுத்தில் மலரும் எண்ணப் பூவே
உன்னில் உறைந்த அன்பின் வீச்சை
உணர்வாய் பகிர்ந்த எண்ணக் கீற்றே
கையின் பதிவில் காகிதமாகும்
காத்திருப்பின் பின்னே கரத்தில் கிட்டும்
உருக்கம் நிறைந்து உள்ளம் பேசும்
வாழ்வின் நெருக்கம் வரியாய்ச் சொட்டும்
அனுதினத்தின் அவலம் உறைந்தே இருக்கும்
பாசப்பகிர்வு பண்பியல் நகர்வு
காசின் கனதி காத்திருப்பின் மிகுதி
பேசும் பொருளாய் பெருமை சொல்வாய்
ஆச்சி அப்பு பேணிக் காத்தும்
அடா பொடியா இதனைப் படித்துச் சொல்லு
மடித்துக் காத்த மடலின் வாசம்
விடுத்துப் போனதே விரைவுக் காகிதம்
அருகில் வந்தது
விரலின் அசைவில் உலகம் தெரிந்தது
பனித்த இமைக்குள் படிந்த சுவாசம்
கணத்த பொழுதில் கரைந்த விலாசம்
நைந்த சேலைக்குள் பொக்கிசமாகி
உறைந்த பாச உணர்வுக்கு முன்னால்
உலகச் சுருதி எழுந்து பாய்ந்தும்
காகிதப் பாசத்தில் கரையும் வரிக்கு முன்னே
கானல் நீரே மின்னஞ்சல் வடிவம்.

திருமதி சந்திரா ஜெகதீசன்
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம்!.

அன்று
அந்த மரம்
கிளையெறிந்து
நிழல் பரப்பிக்கிடந்தது.
பூக்கத்தொடங்கிற்று.
காய்க்கவும் செய்திற்று.
காய் கனிய
இருப்பதாக
பரவலாக பேச்சு.
தூரத்து
பறவைகள் எல்லாம்
சேதியறிந்து
வந்து போயின.
அங்கு
இளைப்பாறவும்
தங்கவும் செய்தன.
சில
(இ)ராஜ பறவைகளும்
வந்து போயின.
வந்தமரும்
சிறகு மடிப்போசையில்
சில இலைகளை
உதிரச்செய்தன.
தம் அலகுகளை
கூர்மைப்படுத்துவதாகவும்,
அழகுபடுத்துவதாகவும்
காட்டிக்கொண்டு
கிளைகளை
காயப்படுத்தின.
மீண்டும்
பறத்தலுக்கான உந்தலில்
சிறகு விரிப்பில்
கிளைகளை ஒடித்துப்போட்டன.
காய்களை உதிரச்செய்தன.
வாரி வாரி
அள்ளிக்கொடுத்து
பழக்கப்பட்டுப்போன
தாய் மரமோ,
எல்லாவற்றையும்
தாங்கிக்கொண்டது.
நாளையும்
தாய் மரம் துளிர்க்கும்.
(இ)ராஜ பறவைகள்
மீண்டும் திரும்பி வரும்.
அப்போதும் தாய் மரம்
வரவேற்று உபசரிக்கும்!

ஈழம் சேகுவேரா
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் இதழ் 163 அட்டைப்படக் கவிதை:




சிரிப்பை இதழில் சுமந்துகொண்டு சிறகடித்த வெள்ளைப்புறாவே
சிம்மசொப்பனத்தை சிறையிலடைத்ததே வெள்ளைக்கொக்குகள்
நெருப்பை நெஞ்சில் சுமந்து கனன்ற நீயொருகறுப்புச் சூரியனே
நிகரில்லாத் தியாகத்தினால் நீண்டவரலாறாய் ஆகிநின்றவனே
இருப்பை உறுதிசெய்ய இருண்டகண்டத்தின் ஒளிர்ந்தமுழுமதியே
இன்னல்களைத் தாங்கிவந்து நிமிர்ந்த இணையில்லாக்காவலனே..!

தமிழோடு இந்தியமொழிகள்கற்பிக்க தனிச்சட்டம் இயற்றியவனே
தரணிவாழ் தமிழர்களும் தனிப்பற்றுவைத்த உலகத்தலைவனே
அமிழ்தோடு ஆட்சிப்பணிதருவதென அடிபணியக் கேட்டதற்காய்
அகிலத்தின் தீர்ப்புக்கென ஆயுள்தண்டனையிலும் அசராதவனே
கமழ்ந்திடும் கள்சுமந்த மலராய் எம்கருத்தினில் உறைந்தவனே
காலத்தால் உன்னிடத்தை எந்தக்கரங்களும் எட்டித்தொட்டிடாது..!

ஆணின் வெற்றிக்குப்பின்னால் பெண்ணிருப்பது அகிலமறிந்ததே
ஆச்சரியமாய்ப் பார்க்குமுலகில் அரணான வின்னிமண்டேலாவும்
பெண்ணின்பங்காய் இல்லறத்தில் பிணைந்திருந்ததோடல்லாதுன்
போராட்ட வரலாற்றிலுமுன் பின்புலத்தில் அவரே கடமைபாத்தார்
கண்ணின் இமையாய் கறுப்பின மக்களுரிமையைக் காத்திடவே
கடுங்காலவல் தாண்டிவந்த உன்நாமம் காலத்தால் வாழுமையா..!

அம்பலவன்புவனேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களே ஆக்கமும் அழிவும்!.

(ஆற்றையும் கோடும் கூற்றையும் நம்பலாம்)

மதயானையையும் நம்பலாம்
பாயும் வேங்கையை நம்பலாம்
சேலை கட்டிய மாதரை நம்பாதே)

என்று விவேக சிந்தாமணியில் கூறப்பட்டு இருக்கிறது எங்கே பார்த்தாலும் எக்காலத்திலும் பெண்ணை ஒரு கெட்டவளாகவும் ஏமாற்றுக் காரியாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளது அதன் காரணம்தான் என்ன?
சேலை கட்டிய மாதர் என்னும் போது ஆண்களின் சகோதரிகளும் பெற்றதாயும் கூட அதில் அடங்குகின்றனர் தானே?
அதை மறந்து ஒவ்வொரு தமிழ் ஆண்மகனும் என் தாய் போல் எந்த பெண்ணும் இல்லை என் சகோதரி போலே யாரும் அழகு இல்லை என்று மார்தட்டிப் பேசி கொள்கிறார்கள் ஆனால்
பெண் என்பவள் மனைவியாக வரும் போது மட்டும் அவளை நம்பக் கூடாது என்று சில ஆண்கள் சொல்வதன் அர்த்தம் தான் புரியாமல் போகிறது இன்று மனைவி நாளை அவளும் ஒரு தாய் என்பதை ஏன் மறக்கிறார்கள் இந்த ஆண்கள்?
(ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே) என்பதுதான் உண்மை எங்கு பார்த்தாலும் ஒரு உயிர் உண்டாகப் பெண் தேவை அது ஆண்கள் இல்லாமல் பெண் உயிரை உண்டாக்க முடியாது என்றாலும் ஒரு விதை முளைக்க நல்ல பசளை நிலம் தேவை அது போலே உயிர்களுக்கு வடிவம் கொடுத்துப் பத்துமாதம் சுமைதாங்கி கருவில் உணவு ஊட்டி பின் மழலையில் பால் ஊட்டி ஒரு சேயை நல்ல மனிதனாக உருவாகுவது பெண்தானே?பெண்மை என்பது உலகில் இல்லை என்றால் எந்த படைப்பும் இல்லை அது மனிதர்களாகவோ விலங்குகளாகவோ மரம் செடி கொடிகளாகவோ இருக்கலாம் இந்த உலகில் நாம் காணும் காட்சிகளில் எங்கும் பெண்மை நிறைந்து இருக்கின்றது
அதனால்தான் இந்த உலகை ஆட்டிப் படைக்கும் ஆண்டவன் என்று சொல்லப்படுகின்றது. கண்ணுக்கு தெரியாத வலிமைக்குக் கூட சக்தி என்று பேர் வைத்துள்ளார்கள் அன்று யாவும் அறிந்த ஞானிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் பெண்களை இழிவாக பேசுபவர்களும் பெண்மை அருகில் இல்லை என்றால் பலன் இழந்து புகழ் இழந்து தான் போகிறார்கள் அதனால்தானோ உண்மை அறிந்தவன் சொல்லி வைத்தான் அன்று (ஒரு ஆண்மகனின் வெற்றிக்கு பின்னாலே ஒரு பெண் இருக்கின்றாள் என்று ) அது தான் உண்மை இதை சில ஆண்கள் ஒப்புக் கொள்ள மறுக்கின்றார்கள் ஆனால் பெண்மை அவனை விட்டுப் பிரியும் போது அந்த உண்மை அவனுக்கே நிச்சயம் புரிகிறது
பெண் என்பவள் என்றும் அன்பு காட்டி அரவணைக்கப்பட வேண்டியவள் பெண்கள் வாழ்வில் கண்கள் போலே பாதுகாக்கப்பட வேண்டியவள் என்பதை ஆண்கள் உணர்ந்து நடந்தாலே வாழ்க்கை இனித்துவிடும் என்றும் இல்லற வாழ்க்கை இனித்து விடும்

கவி. மீனா
ஜேர்மனி

## கவனியுங்கள் !.

உங்கள் எண்ணங்களைக் கவனியுங்கள் அவைகளே வார்த்தைகளாக வருகின்றன.

உங்கள் வார்த்தைகளைக் கவனியுங்கள் அவைகளே செயல்கள் ஆகின்றன.

உங்கள் செயல்களைக் கவனியுங்கள் அவைகளே பழக்கம் ஆகின்றன.

உங்கள் பழக்கங்களைக் கவனியுங்கள் அவைகளே உங்கள் நடத்தைகள் ஆகின்றன.

உங்கள் நடத்தைகளைக் கவனியுங்கள் அவைகளே உங்களுடைய எதிர்காலத்தை நிச்சயிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் என்பவள்.

பூமியைப் பாதுகாக்கும் ஓஸோன் படை போல் உலகைக் காக்கும் குழந்தையைப் பாதுகாக்கும் கருவறையினுள், பூமியைக் குளிரச் செய்யும் கடல் போன்ற கருப்பைத் திரவத்தினுள் மிதந்து வாழ்ந்து கரு இருளில் களித்துறங்கிய கருமுகில் பெண்ணாள், கருவிறங்கி உலகின் குளிர்மைக்காய்க் கண்விழித்தாள். உலகின் ஒளி பூமித் தாயின் மடியில் புகலிடம் புகுந்தது. பெண்ணாய்ப் பிறந்து கள்ளிப் பாலுக்கு இரையாகிய காலம் கரைந்தோடி, அவள் சொல்லுக்காய் நாடு விழித்திருக்கும் காலம் காட்சிக்கு வந்து விட்டது. இன்று விண்வெளியில் உலாவந்த பெண் தைரியத்தின் முழவடிவம், இன்பம் சுவைக்கும் சுதந்திரப் பறவை.

பெண் என்றும் அடிமையில்லை. அவளை யாரும் அடக்கவுமில்லை. அவளே அடங்கி வாழ்ந்தாள். அவளின் மென்மை அடக்கத்தை அணிகளனாக்கியது. அன்றும் இன்றும் பெண்களைப் பாடும் கவிஞர்களே அதிகம். கொடியெனக் கணவன் தோளில் சாய்ந்தாள். கொழுகொம்பாய் அவன் இருக்க, அவனைப் படர்ந்தாள். கரமென மாமியார் உறவில் கைகோர்த்தாள். ஆசானாய் குழந்தைகளை ஆற்றுப்படுத்தினாள். நாத்தனார் வாழ்வில் நலன் விரும்பியானாள். மொத்தத்தில் குடும்பச் சொத்தே அவளானாள். பல வீடுகளின் ஆட்சியே நாட்டின் ஆட்சி. பல வீடுகள் இணைந்ததே, நாடு. வீடு விளங்க நாடு விளங்கும். எனவே தான் பெண்கள், வீட்டின் ஒளி அல்லது நாட்டின் ஒளி என்கின்றோம். இந்த வீட்டிற்கு விளக்கேற்ற ஒரு பெண் தேவை என மாமியார் நாடுவதன் சூட்சுமம்தான் என்ன? விளக்கேற்ற விரல்கள் அற்றவர்களா வீட்டிலிருப்போர். புகுந்த வீட்டின் பெருமை ஒளியை உலகிற்கு விளக்கவென புகுந்தவளாதலால் விளக்கெரிக்க ஒரு பெண் வரவேண்டுமென்ற வார்த்தையைப் பிரயோகித்தனர், பெரியோர். மென்மையான இதழ் பட்ட ஊதுகுழல் வெறுங்காற்றை உள்ளெடுத்து இசையாக வெளியே பரப்புதல் போல கணவன் மனையில் மென்மையாகப் புகுந்து சாதாரண குடும்பத்தைத் தரமான குடும்பமாய் உலகிற்கு உணர்த்தப் புகுமனையில் கால் வைப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுறுதி கொண்ட ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள். பெண்ணுக்குப் பிரசவம் என்பது மறுபிறப்பு என்பார்கள். ஒரு குழந்தை பிறக்கும் வரை எத்தனையோ வேதனைகளைச் சுமக்கின்றாள். தன் உயிரைப் பணயம் வைத்து அந்தக் குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள். குழந்தை பிறந்து மறு வருடமே அடுத்த குழந்தைக்குத் தயாராகி விடுகின்றாள். இதுவே அவளின் தைரியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. கருணைக்கும் இரக்கத்திற்கும் சகிப்புத்தன்மைக்கும் பொறுமைக்கும் இருப்பிடம் பெண்தான். எனவேதான் ஒரு குழந்தை வளரும் வரையில் தாயின் பராமரிப்பில் இருக்க வேண்டுமென்று சட்டம் கூறுகிறது.

இல்லறத்தை விடச் சிறந்த அறம் ஒருவனுக்கு இல்லை. இந்த இல்லறத்தைச் சிறப்பான முறையில் நடத்த வேண்டுமென்றால், சிறந்த இல்லாள் தேவை. இதன் மூலமே அவன் சமூகத்தின் முன் ஏறுபோல் பீடுநடை பயில முடியும் என வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கின்றார். உடலால் வாழும் ஆணைவிட உள்ளத்தால் வாழும் ஆற்றல் பெற்ற பெண் உலகில் சிறப்புப் பெறுகின்றாள். இந்தப் பெண்மையின் பெருமையை உணர்ந்துதான்மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்லமாதவம் செய்திடல் வேண்டுமம்மாஎன்று கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை அவர்கள் கூறுகின்றார்.

ஒரு அழகிய கற்புடைய பெண் ஆண்டவனின் முழுமையான சிறந்த படைப்பாகவும், தேவதைகளின் பெருமையாகவும், உலகின் அதிஅற்புதமான தனித்த அதிசயமாகவும் விளங்குகின்றாள். என்று ஹெர்மிஸ் என்னும் அறிஞர் கூறுகின்றார். நாம்பெற்றிருக்கின்ற வாழ்விற்கும், அந்த வாழ்வைத் தகுதியுள்ளதாக அமைத்துத் தந்ததற்கும், நாம் கடவுளுக்கு அடுத்தபடியாகப் பெண்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம் என்று பொவீ என்னும் அறிஞர் மொழிந்துள்ளார்.இதனையேதான் நமது மகாகவி பாரதியாரும் பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்புவி பேணி வளர்த்திடும் ஈசன். என்று முழுமையாகப் பாடிச் சென்றார். எனவே பெண்ணின் பெருமையை உணர்வோம். புவி பேணி வளர்த்திட அவள் புகழ் பாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிப்பாள் பெண்.



பெண்கள் எத்தனையோ தியாகங்களைச் செய்கிறார்கள். எனக்குத்தெரிந்த பெண் ஒருவர் தன் வாழ்க்கையையே குடும்பத்திக்காகத் தியாகம் செய்துள்ளார். சினிமாவிலும் நாடகத்திலும் பார்த்தும், கதைகளில் படித்தும் இருக்கிறோம். பெண் முழுமை அடைவதேதான் தாய்மை அடைவதில்தான். திருமணமாகி இருபது ஆண்டுகளாகியும் தாய்மைப் பேறு அடைவதையே விட்டுக் கொடுத்திருக்கிறார் என்றால் அந்தத் தியாகத்தை என்னவென்று பாராட்டுவது.

அவர் வீட்டில் கடைசிப்பெண் இவள்தான். பெயர் பவானி. தன்னிலும்விடப் பத்து வயது மூத்த ஒருவருக்கு பவானியின் அக்கா வாழ்க்கைப்பட்டாள். அடுத்தடுத்து நான்கு பையன்களும் ஐந்தாவதாக பெண் குழந்தையும் பிறந்த சமயத்தில் அக்கா இறந்துவிட அக்குழந்தைகளையும் அக்குடும்பத்தையும் பராமரிப்பதற்கு இரண்டாவது மனைவியாக ஒரு பெண் தேவைப்பட்டாள். இன்னொரு பெண்ணை இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்தால் விபரம் தெரியாத இக்குழந்தைகள் சித்தியின் கொடுமைக்கு ஆளாகுவார்கள் என நினைத்து மனைவியின் தங்கையான பவானியை அவருக்கு இரண்டாம் தாரமாக திருமணம் செய்து கொடுக்க பெரியோர்கள் எல்லாம் பேசி முடிக்க பவானி முதலில் இதற்கு சம்மதிக்கவில்லை.

தாய், தந்தை மற்றும் அண்ணன்கள் அனைவரும் அவளை வற்புறுத்தி அவளுடைய சம்மதம் இல்லாமலே அவளுக்குத் திருமணம் முடித்து விட்டார்கள். திருமணம் முடித்து ஒரு வாரம் சோகமாகவே இருக்க பவானி கடைசியில் தற்கொலை செய்ய முயன்றாள். அவர்கள் அவளைக் காப்பாற்றி அவளிடம் தாய் இல்லா அக் குழந்தைகளைக் காட்டி " இவர்களுக்காகத்தான் உனக்கு விரும்பமில்லாத இத்திருமணம் நடைபெற்றது. இனி உன்னுடைய விருப்பம் எதுவோ அந்த முடிவை நீ எடுத்துக்கொள் " என்று அனைவரும் கூறிவிட்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவானி ஒருநாள் முழுவதும் யோசித்து திடமான முடிவெடுத்து மறுநாளே ஆஸ்பத்திரிக்குச் சென்று டாக்டரிடம் ஆலோசித்து ஒரு வாரத்திற்குள் குடும்பக்கட்டுப்பாடு சத்திரசிகிச்சை செய்துகொண்டு வந்துவிட்டாள். அதன் பிறகு தனக்குக் கிடைத்த வாழ்க்கையை மகிழ்வுடன் ஏற்று அக்காவின் குழந்தைகளையே தன் குழந்தைகளாகப் பாசத்துடன் வளர்த்து தன்னையே அம்மா என்று அக்குழந்தைகளும் அன்புடன் அழைக்கும்படியும், தன்னைவிட சற்று வயது கூடிய கணவரையும் நல்ல முறையில் கவனித்தும் குடும்பத்தை சந்தோஷமாக நடத்திக்கொண்டு இருக்கிறாள்.

பெற்ற தாய்கூட இந்தளவுக்குக் குழந்தைகளை வளர்த்திருக்க மாட்டார்கள் என்று பவானியை அனைவரும் பாராட்டி அவளுக்கு உற்ற துணையாக இருக்கிறார்கள். அவளைப்பற்றித் தெரியாத சிலர் இவளை மலடி என்றும் பூ..பூக்காத மரம் அதனால்தான் ஐந்து பிள்ளைகள் உள்ள இந்த வயதானவருக்கு கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். மூன்று அண்ணன்கள் இருந்தும் சற்று வசதியுடன் இருக்கும் இவளை இப்படிக் கொடுத்திருப்பார்களா.. என்று அவள் காதுபடப் பலர் பேசினாலும் எதையுமே சட்டை செய்யாமல் குழந்தைகளுடன் சந்தோஷமாக இருக்கின்றாள்.

தன்கணவன் வைத்திருக்கும் வியாபார தாபனத்துக்கு உதவியாக இருந்து வருமானத்தையும் பெருக்கி, தனக்கும் கடைசிப் பெண் குழந்தைக்கும் தங்க நகைகளையும் வேண்டி அவளையும் நல்ல முறையில் வளர்த்து நல்ல வரனாகப் பார்த்து திருமணம் செய்து கொடுத்திருக்கிறாள். இப்படி ஒரு மனத்தைரியம் பெண்களைத் தவிர யாருக்கு வரும். பெண் என்பவள் எதையும் சாதிப்பாள் என்பதற்கு என் தோழி ஒரு எடுத்துக்காட்டாகும்!..

கீதா – சுந்தரேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள்.

- இலங்கையில் நாளொன்றுக்குச் சராசரியாக 5 குழந்தைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும் இதில் 18 வயதிற்குட்பட்ட பெண்களும் 84 வீதமானோர் பாதிக்கப்படுவதாகவும் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

- தற்போது ஜெர்மனியில் மார்பகப் புற்றுநோய் அதிகரித்துக் காணப்படுகின்றதாகவும் வருடாவருடம் இந்த நோயால் சுமார் 72.000 பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும் சென்றவருடத்தில் மட்டும் 17.000 பேர் இறந்திருப்பதாகவும் சுகாதாரப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

- ஜேர்மனியில் தற்போது சுமார் 4 - 7 லட்சம் வரையிலான பெண்கள் பாலியல் தொழில் புரிகிறார்கள் எனவும் இதனால் தினமும் 1.2 மில்லியன் யூரோ வருமானமாகப் பெறப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

- ஜேர்மனியின் வரலாற்றில் முதன்முறையாக பாதுகாப்பு அமைச்சராக பதவி ஏற்ற பெண்மணி லயன் அவர்கள் தனது முதல் பயணமாக ஆப்கானிஸ்தான் நாட்டுக்குச் சென்று அங்கு நிலைகொண்டிருக்கும் ஜேர்மனியப் படையினருடன் கலந்துரையாடி விருந்து உண்டு திரும்பியுள்ளார்.

- தற்போது ஜேர்மனி பாராளுமன்றத்திலுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை 631 பேராவர். இதில் 230 பேர் பெண்கள் அதாவது மூன்றில் ஒரு பங்கினர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும். அரசியலில் பெண்களின் பங்கு கூடிவருவதாகச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

- இந்தியாவில் ஒரு வருடத்தில் சுமார் 7 லட்சம் சிறுமிகள் கற்பழிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் 15 வயதிற்குட்பட்ட விலைமாதர்கள் 15 வீதம் எனவும் ஆய்வு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

- இந்தியாவில் வரதட்சனைக் கொடுமை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 8.233 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 1 மணித்தியாலத்திற்கு ஒருவர் என்ற வீதத்தில் படுகொலை இடம்பெறுவதாக ஆய்வு ஒன்று குறிப்பிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வறுமைய நாடுகளில் மட்டுமல்ல வளர்ந்த நாடுகளிலும் தவறான கர்ப்பம் தரித்தலால் 15 - 19 வயதுப் பெண்களில் வருடாந்தம் 70.000 பேர் இறப்பதாகவும் தினமும் இந்த வயதினருக்கு பிறக்கும் பிளளைகளின் எண்ணிக்கை 20.000 என்றும் ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது

- கடந்த 2013ம் ஆண்டில் 18 வயதிற்குட்பட்ட பெண்கள் உலகில் சுமார் 7.3 மில்லியன்பேர் கர்ப்பம் தரித்திருக்கிறார்கள் என ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

- இந்திய மேற்கு வங்க மாநிலத்தில் பஞ்சாயத்துச் சபையின் தீர்ப்பால் ஒரு பெண் 13 ஆண்களால் வல்லுறவுக்கு ஈடுபடுத்தப்பட்ட கொடுமையான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

- உலகப்பெண்கள் ரெனிஸ்விளையாட்டில் அமெரிக்க வீராங்களை செரீனா வில்லியம் புதியசாதனை. 32 வயதுடைய இவர் 156 வாரங்கள் தொடர்ந்து உலகின் முதலாம் இடத்தில் நின்று சாதனை. இவர் 56 வெற்றிக்கிண்ணங்களை இதுவரை பெற்றிருக்கிறார். உலகின் பிரபல வெற்றிக்கிண்ணங்களாக இவர் பெற்றுக்கொண்டவை..

| | |
|---|---|
| அவுஸ்திரேலியாக் கிண்ணம் | - 5 தடவை |
| விம்பிள்டன் கிண்ணம் | - 5 " |
| அமெரிக்கா கிண்ணம் | - 5 " |
| பிரென்ஸ் கிண்ணம் | - 2 " |

இவர் வெற்றிபெற்றதன் மூலம் பரிசுப்பணமாக இதுவரை பெற்ற பணம் எவ்வளவு என்று தெரியும் 5கோடி 17 லட்சம், 38 ஆயிரம் 481 அமெரிக்க டொலர்களாகும்..

---

அடுத்த இதளில்!.

பிறேசிலில் 2014 யூன், யூலை மாதங்களில் நடைபெறவுள்ள உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முழவிபரங்களும் வெளிவரவிருக்கின்றன என்பதனை விளையாட்டு ரசிகர்களுக்கு அறியத்தருகிறோம்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் முதல் சாதனை பெண்கள்

பெண்கள் இடம் பெறாத துறையே இல்லை என்று சொல்லும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளோம். ஆனால், ஒவ்வொரு துறையிலும், ஒரு பெண் முதல் முறையாக நுழையும் போது, அதில் உள்ள பல்வேறு பாதகங்களையும் அனுபவித்து, அவருக்குப் பின் வரும் பெண்களுக்கு வழிகாட்டியாக இருந்துள்ளார்.அதுபோன்று பல்வேறு துறைகளில் முதல் முறையாக காலடி எடுத்து வைத்த பெண்களின் பட்டியலை இங்கு காணலாம்...

இந்தியாவின் முதல் பெண் பிரதமர்: இந்திரா காந்தி

இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர்: சுசேதா கிருபளானி (உத்திரபிரதேசம்)

இந்தியாவின் முதல் பெண் ஆளுநர்: சரோஜினி நாயுடு (உத்திரபிரதேசம்)

இந்தியாவின் முதல் பெண் உச்சநீதிமன்ற நீதிபதி: பாத்திமா பீவி

இந்தியாவின் முதல் பெண் வெளிநாட்டு தூதர்: விஜயலட்சுமி பண்டிட்

இந்தியாவின் முதல் பெண் ஐ.பி.எஸ். அதிகாரி: கிரண்பேடி

இந்தியாவின் முதல் பெண் விண்வெளிப் பெண்மனி: கல்பனா சாவ்

மிஸ்யூனிவேர்ஸ் பட்ட பெற்ற முதல் பெண்மணி: சுஸ்மிதா சென்லா

மக்களவை முதல் பெண் சபாநாயகர்: மீரா குமார்

முதல் பெண் குடியரசுத் தலைவர்: பிரதீபா பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிஆனந்தனின் சிந்தனைகள்.

உறுத்தல்: –

சூரியனைப் பார்த்து நிலம் கத்தியது.. நீ செய்வது சரிதானா!.. சூரியன் அதிர்ச்சியுற்றான். இதுவரை அவனை யாருமே இப்படிக் கேட்டதில்லை என்ன சொல்கிறாய்!.. இருளை நீ மறைக்கலாம்.. அழகான விண்மீன்களை எப்படி நீ மறைக்கலாம்!..சூரியன் திடுக்கிட்டான். ஒவ்வொரு ஒளியிலும் ஒவ்வொரு அழகு இருக்கிறது உனக்குத் தெரியுமா!...ஞாயிறு முகிலுள் ஒளிந்தான். நிலத்தின் குரல் அவன் காதில் ஓங்கி ஒலித்தது..

"வெளிச்சத்தை மறைக்கலாமா வெளிச்சம்"

கறை: –

கடை.. தராசில் பொருட்களை ஏற்றும் போதெல்லாம் தட்டு ஒரு பக்கம் சாய்ந்தது. படிக்கல் இருக்கும் தட்டு மேலேயே நின்றது. உருளைக்கிழங்குகளும் வெங்காயங்களும் இதை உற்றுக் கவனித்தன. ஓ!...இது கொடுமை!.. என்று கத்தியது உருளைக்கிழங்கு வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்த வெங்காயமும்" இது பச்சைத் திருட்டு" என்று வயிற்றெரிச்சலைக் கொட்டியது. இரண்டும் குரலெழுப்பின..

"தராசை முதலில் எடைபோடு"

புடம்: –

காட்டில் இருந்த மூங்கில் ஒரு நாள் கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக் கம்பி தன்னைத் துளைத்த போது " ஐயோ உடல் புண்ணாகிறதே" என்று கதறி அழுதது. கொஞ்சம் பொறுமையாக இரு...என்று மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று. மூங்கில் புல்லாங்குழல் ஆனது. மேடையில்... உலகமே மயக்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று. அது சொன்னது..

"புண்பட்டவன் பண்பட்டவன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையை மனதில் வளர்ப்பது!.

ஆசை என்ற வார்த்தைக்கு அவா, விருப்பு, பற்று, ஈர்ப்பு எனப்பல கருத்துக்கள் உண்டு. இந்த ஆசையானது சகல வயதினருக்கும் ஏற்படும். அனைவரின் மனதை ஆட்டிப்படைக்கும் அதீத சக்தி கொண்டதாகும். இது ஒவ்வொருவரின் மனதிலும் தோன்றும் அல்லது ஏற்படும் விதத்தைப் பொறுத்து அதற்கான வடிவம் வெவ்வேறு பெயர்களால் வரையறுக்கப்படுகின்றன. பொருள், பணம், சொத்து, கல்வி, தொழில், அதிகாரம், கௌரவம், புகழ், ஆண், பெண் என ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையில் ஆசை அல்லது விருப்பு ஏற்படுகின்றது. ஒவ்வொரு மனிதரிடத்திலும் ஆசை சிகரங்களாக வலுப்பெற்றிருக்கின்றன. ஆசை இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. அப்படி ஒரு துளிகூட ஆசை இல்லாத மனிதன் இந்த உலகில் இருக்கின்றானா. இதுதான் உண்மை நிலையாகும்..

ஒரு பொருள்மீது ஆசை ஏற்படுகின்றது என்றால் அதன் அழகு, கவர்ச்சி, பயன் என ஏதோ ஒரு காரணமாகவே அமைந்துவிடும். இயற்கைமீது ஆசை எழுகிறது என்றால் ஏதோ ஒரு வகையில் தனது மனதிற்குப் புத்துணர்ச்சியளித்து இன்பமடையச் செய்கின்றது. சில மனிதர் விலங்குகளின்மீது அதீத ஆசை வைத்திருப்பாகள் இது அசைக்கு அப்பாற்பட்ட அதிக விருப்பத்தால் தோன்றும் உணர்வு. காரணம் அவை மனிதனுக்குச் சந்தோஷத்தையும் பாதுகாப்பையும் கொடுக்கின்றன. ஆறறிவு மனிதனுக்கு நல்ல அறிவுரைகளை செயலால் செய்து காட்டும் அற்புத இயல்பு கொண்டவை. சில மனிதரின் நல் நடத்தை, நல்ல உரையாடல், நல்ல அணுகுமுறை மற்றவர்களை கவரும் தன்மையைக் கொண்டிருந்தாலும் சிலரின் நடவடிக்கைகள் சிலருக்கு வெறுப்பையும் சில சமயங்களில் ஏற்படுத்துவதுண்டு. ஆனால் கற்றுக்கொண்டிருப்பவர்கள் கல்விமீதான ஆசையையும் தேடலையும் என்றுமே தளர்வடைய விடக்கூடாது.

ஆசைகளை மனதில் வரித்துக்கொள்வதில் எந்தத் தவறுமே இல்லை அதனை யாருமே தவறாகக் கருதக்கூடாது. கல்வி கற்கின்ற மாணவர்கள் தமது எதிர்கால ஆசைகளை ஆசிரியர், வைத்தியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளர், அறிஞர், கவிஞர் , எழுத்தாளர் எனப் பலதுறைகளில் ஒன்றையாவது அடைவதற்கு ஆசைப்படவேண்டும். ஆனால் கனவோடான ஆசையாக இருக்காமல் அதற்காகக் கடுமையாக முயற்சி எடுக்க வேண்டும் . உழைக்க வேண்டும். சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, தியாகம், புரிந்துணர்வு அதிகமாகத் தேவை. அப்பொழுதுதான் ஆசைகளை நாம் நிறைவேற்ற முடியும்.

நாங்கள் கற்பனையால் சில விநாடிகள் சந்தோஷத்தைப் பெறலாம் ஆனால் நிஜ வாழ்க்கையில் சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும் என விரும்பினால் அல்லது நமது ஆசைகளை வெற்றியடையச் செய்ய வேண்டுமானால் அதற்கேற்ற வழிகள், வாய்ப்புக்கள், வசதிகள் எங்களுக்கு ஏற்றவாறு அமைவாக இருந்தால் ஆசைகொள்வது பிழையில்லை.கல்வியில் உயரவேண்டும் நல்ல தொழில் கிடைக்க வேண்டும், நல்ல சம்பளம் பெறவேண்டும் நல்ல வசதிகள் கிடைக்க வேண்டும் என ஆசைப்படுவதுடன் இயலாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்னைப் போல் பிறரும் வாழவேண்டும் எனவும் நாம் ஆசைப்படவேண்டும்.

எங்களால் எக்காரியத்தையும் செய்யமுடியும், சாதிக்கமுடியும் அல்லது அதற்கான தகுதி அல்லது ஆற்றல் அல்லது அறிவு,அல்லது திறமை உண்டு, நம்பிக்கை உண்டு என எங்கள் மனமே எங்களுக்கு உற்சாகம் தொடுத்தால் ஆசைகொண்டு முயற்சித்தால் வெற்றிபெறலாம்.. சுருக்கமாகவும் முடிவாகவும் பார்த்தால் அல்லது கருதினால் அல்லது நோக்கினால் சரியானவைமீது ஆசைப்பட்டால் வெற்றியே உண்டு. கிடையாது, பெறமுடியாது எனத்தெரிந்தும் ஆசைகளை விருட்சமாக மனதிலே வளர்ப்பதுதான் குற்றம். ஆசையை வையுங்கள் முயற்சி எடுங்கள். நம்பிக்கையுடன் நாம் செயற்பட்டால் அதுவே நியாயமான எங்கள் ஆசைகளை நிறைவேற்றி வைக்கும்.

சிவா
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் பொதுமறை எனும் சிறப்பினை உடைய உன்னதநூல் திருக்குறள். ஈரடிக்குறளாக இலக்கியத்தில் வலம் வந்த உன்னத நூல் திருக்குறள்.

கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புரட்டி குறுகத் தறித்த குறள் என்று பலரால் புகழப்பட்டது திருக்குறளாகும்.

வான் புகழ் வள்ளுவனார் அருளி . உலகிற்கு அளித்த உன்னத பொக்கிசம். வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதி வரை எப்படி? மனிதன் வாழ வேண்டுமென தத்துவமாக காட்டி நிற்கும் அற்புத நூல் திருக்குறள். தெள்ளிய நீதிகளை திக்கெட்டும் பரப்பி தீந்தமிழ் அமுதம் தந்திடும் உயரிய பனுவலாக உலகாழ்வது இது.
வாழ்வியலின் வண்ணங்களை படம்பிடித்துக் காட்டி, மனிதன் ஒழுக்கமாக வாழ வழி காட்டியது திருக்குறள். கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தில் அழகாக வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

எழுத்துக்களுக்கு முதல் அ! அதுபோல உலகத்திற்கு முதல்வன் ஆதிபகவான் என அழகாக கடவுளை கூறுகிறார்.
பாலர் முதல் முதியோர் வரை பயன் பெறும் அற்புத நூல் இது.
இற்றைக்கு மூவாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய பனுவலாக காட்சி தருகிறது.

133 அதிகாரங்களையும். 1330 பாடல்களையும் தனதாக்கிக் கொண்டு உன்னத தமிழுக்கு பெருமை சேர்க்கிறது. திருக்குறள். கல்வி. கல்லாமை, கேள்வி அறிவு என தொடங்கி, அடக்கமுடமை ஒழுக்கமுடைமை , அழுக்காறு என அத்தனை வாழ்க்கையின்
அம்சங்களை எளிதில் புரியும்படி உரைப்பது இந்நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இக்குறள்களை பிள்ளைகள் மனனம் செய்து , அவற்றின் தத்துவத்தை உணர்ந்து நடப்பது இன்றியமையாதது.
ஆனால் அறிவியல் உலகில் எமது வாழ்வுப்பயணம் நகர்கிறது. வேகமான வளர்ச்சிப் பாதையில் மனித வாழ்வு சென்றாலும், சமயம் , ஒழுக்கம் இவைதான் அமைதியைக் கடைப்பிடிப்பதற்கு எமக்கு ஊன்றுகோல்களாக அமைகின்றன.
திருக்குறளின் உன்னத கோட்பாடுகள் எம்தமிழ்மொழியில் இருப்பதுகூட தமிழுக்குப் பெருமை. இதனால்த்தான் உலக அரங்கில் தமிழுக்கு உயர்ந்த இடம் தந்தது திருக்குறள்.

இன்று பல மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு உலக அரங்கில் உலா வருவதுகூட தமிழுக்கு தந்த கொடை அல்லவா? பன்னாட்டு அறிஞர்கள் திருக்குறளின் உன்னத தன்மையை பெரிதும் மதித்து தலைவணங்குகின்றனர்.

சுவைட்சர் என்ற யேர்மனிய அறிஞர் திருக்குறளின் இல்வாழ்க்கையும் ,விருந்தோம்பலையும் சிறப்பாக பாராட்டியுள்ளார்.
செல்விருந்தோம்பி வரவிருந்து பார்த்திருப்பான் என்ற குறளில் விருந்தோம்பலின் பண்பை வள்ளுவர் விளக்கியதை வியந்து போற்றியுள்ளார்.
வீரமாமுனிவரில் தொடங்கி, எத்தனையோ அறிஞர்கள் எமது திருக்குறளையும் தமிழின் பெருமையையும்போற்றியுள்ளனர்.

உலக அரங்கில் உன்னத இடத்தைத் தந்த இத் திருக்குறளை நாமும் படித்து, தமிழுக்கு பெருமை சேர்ப்போமாக.

தமிழ்மணி நகுலா சிவநாதன்
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு - 139
## (தை - மாசி 2014)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தை | ப் | பொ | ங் | க | ல் | கா |
| வி | னி | ரு | ம் | ட | ட் | ப |
| க | ன் | ளா | கா | ற் | று | க |
| ட | வ | தா | ழி | கோ | ச | லை |
| க | ள் | ர | ளி | ள் | பு | ஞ |
| வி | ள | ம் | ப | ர | ம் | ர் |
| மா | ம் | அ | க | தி | பா | வே |

போட்டியில் கலந்துகொண்டவர்களும். பரிசு பெறுபவரும்.

திருமதி.ஜெயா.நடேசன் - Havixbeck
திருமதி.சிவாஜினி.சின்னத்துரை - Swiss
திருமதி.கலைவாணி.ஏகானந்தராசா - Weeze
திருமதி.சுலோசனா.புவனேந்திரன் - Duisburg
திருமதி.புஸ்பவதி.திலகநாதன் - Berlin
திரு.நவநீதன்.கந்தசாமி - Swiss
திரு.தேவானந்தராசா.தியாகராசா - Monchengladbach
திரு.எஸ்.பதன் - Weeze

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும்...இவர்களில் பரிசுபெறும் அதிஸ்டசாலி..

திருமதி. சிவாஜினி.சின்னத்தரை - Swiss



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 140
## (பங்குனி - சித்திரை 2014)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ:-

01-07 வருடா வருடம் இவர்களுக்காகக் கொண்டாடப்படும் தினம்

08-10 தாயகத்தின் இப்பிரதேச அவலங்கள் ஓய்ந்தபாடில்லை

22-28 மார்ச் மாதம் உலகம் பூராவும் கொண்டாடப்படும் தினம்

32-35 அதிகமாக நித்திரை கொள்பவர்களை இந்தப் பிராணிக்கும் ஒப்பிடுவர்

45-47 தானியவகைகளில் ஒன்று

வ-இ:-

14-12 இனிப்பான தின்பண்டம்

17-15 இலங்கையின் பிரதான நகரங்களில் ஒன்று

21-19 நம் தாயகத்தில் காலை விடியலை எடுத்துக்காட்டும் பறவை

32-29 இந்துக்கோவில்களில் பாடப்படும்

41-38 ஒரு வடிவம்

49-47 பணம், காசு இவற்றை சிலர் இப்படியும் பேச்சுவழக்கில் கூறுவர்

கீ-மே:-

21-07 மாம்பழ இனத்தில் இப்படியும் ஒரு இனம் உண்டு

32-11 நம் நாட்டில் அடிக்கடி நிகழ்வது.

43-36 நெல்லில் இருந்து பெறப்படுவது

49-35 நீர்நிலைகளில் உள்ளது கோவில்களிலும் காணப்படும்

மே-கீ:-

01-15 தமிழர்களின் பாரம்பரிய ஆட்டம் எனச்சொல்லப்படுகின்றது

22-26 அம்மா என்ற அழகான சொல் இன்று இப்படியாகவும் மாறிவிட்டது.

23-44 வீட்டுப் பாவனைப்பொருள்

32-46 நமக்கு முயற்சியும் இதுவும் இருந்தால் பயன் அதிகம்.

முடிவு திகதி **15.04.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமாய் வாழ!. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

(மேழிக்குமரன்)

## ஜீரணத்தை சீராக்கும் மிளகு.

"பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்" என்பது பழமொழி. மிளகு அந்த அளவிற்கு நஞ்சுமுறிப்பானாக செயல்படுகிறது. மிளகானது தங்கபஸ்மத்திற்கு இணையானது. கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ் போன்ற தாது உப்புக்களும், கரோட்டின் தயாமின், ரிபேபிளவின், ரியாசின் போன்ற விட்டமின்களும் மிளகில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் நரம்புத் தளர்ச்சி, நரம்புக் கோளாறு முதலியவற்றை அகற்றி நரம்புகளுக்கு ஊக்கம் தருகிறது. நரம்பு மண்டலம் துடிப்பாக இருந்தால் சிந்தனையும் அதைத் தொடர்ந்து செய்து முடிக்கும் வேகமும் சீராகத் தொடரும்.

காரசாரமான மிளகு உமிழ்நீரை அதிகம் சுரக்க வைக்கிறது. ஜீரணக் கோளறு உடனே குணமாகிறது. ஜீரண உறுப்புகள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டுத் தொந்தரவில்லாமல் செயல்பட உதவுகிறது. உணவும் நன்கு செரிக்க ஆரம்பிக்கிறது. காய்ச்சலுடன் வயிற்று பொருமலையும் மிளகு தணிக்கிறது.

## ஜலதோஷம் போக்கும்

தும்மல் மற்றும் சளியுடன் ஜலதோஷம் என்றால் இருபது கிராம் மிளகுத்தூளை பாலில் கொதிக்க வைத்து ஒரு சிட்டிகை மஞ்சள் தூளும் கலந்து தினம் ஒரு வேளை வீதம் மூன்று நாட்கள் மட்டும் சாப்பிடவும். ஜலதோஷத்துடன் கூடிய காய்ச்சலுக்கு இதேபோல் ஆறு மிளகைத் தூள் செய்து தண்ணீருடன் சாப்பிடவும். இல்லையெனில் பாலில் மிளகுத்தூளைக் கொதிக்க வைத்து அருந்தலாம்.சாதாரண ஜலதோசத்திற்கு காய்ச்சலுக்கும் நன்கு காய்ச்சிய பாலில் ஒரு சிட்டிகை மிளகுப் பொடியும், ஒரு சிட்டிகை மஞ்சள் பொடியும் கலந்து இரவில் ஒரு வேளை அருந்தி வர நல்ல பலன் தரும்.

## நினைவுத்திறன் அதிகரிக்கும்

சோம்பலாகவும், மந்தமாகவும் இருப்பவர்களும், ஞாபக மறதிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளும் மற்ற வயதுக்காரர்களும் ஒரு தேக்கரண்டித் தேனில் ஒரு சிட்டிகை மிளகுத்தூளைக் கலந்து காலையும் மாலையும் சாப்பிட்டு வரவும். சோம்பல் போயே போச்சு. மிளகில் உள்ள பாஸ்பரஸ் மூளையை விழிப்புடன் வைத்திருக்கும். ஆண்மைக் குறைபாடு உள்ளவர்களும், பெண்மைக் குறைபாடு உள்ளவர்களும் தினமும் நான்கு பாதாம் பருப்புகளுடன் ஆறு மிளகையும் தூளாக்கி பாலுடன் இரவில் அருந்தி வருவது நல்லது. குறைபாடுகள் குணமாகும். குழந்தையும் பிறக்கும்.

## உடல்வலி போக்கும் மிளகு

உடம்புவலி, பற்சொத்தை உள்ளவர்களும், மிளகை தினசரி உணவில் சேர்ப்பது நல்லது. சுளுக்கு கீல் வாத வீக்கம் முதலியவைகளுக்கு ஒரு மேஜைக் கரண்டி மிளகுத் தூளை சிறிது நல்லெண்ணெய் கலந்து நன்கு சுட வைத்து அதைப் பற்றிட்டு வர குணம் தரும்.
பல்சொத்தை, பல்வலி, பேசும் போது நாற்றம், பல் கூச்சம் உள்ளவர்கள் சில நாட்களுக்கு மிளகுத் தூளும் உப்பும் கலந்த பற்பொடியை வீட்டில் தயாரித்துப் பல்துலக்கி வரவும்.
மிளகுடன் வெற்றிலை சேர்த்து லேசாக இடித்து நீரில் கொதிக்கவைத்து வடித்த குடிநீரை குடித்துவர மருந்துகளால், உணவுப்பண்டங்களால் ஏற்பட்ட நச்சுத்தன்மை நீங்கும்.

## ஓமம்.

ஓமம் சித்த ஆயுர்வேத மருந்துகளில் அதிகம் இடம்பெறுகிறதுஓமத்தில், கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, கரோட்டின், தையாமின்,ரிபோபுளேவின் மற்றும் நியாசின் போன்றவை அடங்கியுள்ளன.சீதளத்தால் உண்டாகும் சுரம், இருமல், செரிமானம் சரியாக இல்லாதது, வயிற்று பொருமல் பேதி, குடலிரைச்சல், பல் சம்மந்தமான நோய்கள், இரைப்பு நோய் (ஆஸ்துமா) ஆசனவாய் நோய்கள் இவைகளை ஓமம் போக்கும்.இன்று கூட நம்கிராமங்களில் சிறு குழந்தைகளுக்கு வயிறு வலித்து அழும்போது ஓமத் திரவம் கொடுப்பார்கள். இந்த ஓமத் திரவம் ஓமத்தை காய்ச்சி எடுக்கப்படுவது. இது குழந்தைகளுக்கு ஏற்படும் செரியாமையைப் போக்கும் தன்மை கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் பலம் பெற

சிலர் எவ்வளவு சாப்பிட்டாலும் உடல் தேறமாட்டார்கள். இன்னும் சிலர் பார்க்க பலசாலி போல் தோற்றமளிப்பார்கள். ஆனால் மாடிப்படி ஏறி இறங்கினாலோ அல்லது சிறிய பொருளை தூக்கினாலோ உடனே சோர்ந்து போவார்கள்.இவர்கள் ஓமத்தை நீரில் கொதிக்க வைத்து அதனுடன் பனை வெல்லம் சேர்த்து காலை வேளையில் அருந்தி வந்தால் உடல் பலம்பெறும்.

## வயிறுப் பொருமல் நீங்க

சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணக் கோளாறு உள்ளவர்கள் 100 கிராம் ஓமத்தை 1 லிட்டர் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து அது பாதியாக வந்தவுடன் எடுத்து அருந்தினால் மேற்கண்ட அனைத்தும் தீரும்.
ஓமம், மிளகு ஆகியவற்றை தனித்தனி 35 கிராம் எடுத்து நன்கு இடித்து பொடியாக்கி அதனுடன் 35 கிராம் பனைவெல்லம் சேர்த்து அரைத்து காலை, மாலை என இருவேளையும் 5 கிராம் அளவு எடுத்து சாப்பிட்டு வந்தால் பொருமல், கழிச்சல், வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

## பசியைத் தூண்ட

நல்ல தூக்கமும், நல்ல பசியும் தான் ஆரோக்கிய மனிதனுக்கு அடையாளம். இந்த பசியும், தூக்கமும் பறந்துபோனால் நோய்களின் கூடாரமாக உடல் மாறி, அதனால் மனமும் பாதிக்கப்படும்.
பசியைத் தூண்டி உண்ட உணவு எளிதில் சீரணமாகவும், வயிறு தொடர்பான அனைத்து பிரச்சனைகள் தீரவும், ஓமத்தை கஷாயமாக்கி அருந்திவருவது நல்லது.

நலமாய்வாழ அடுத்த இதழில் தொடரும்!.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்டிக்காயின் குணாதிசயங்கள்.

-வெண்டிக்காயின் பூர்வீகம் எந்தியோப்பியா நாடு எனக்கூறப்படுகின்றது. அங்கிருந்து அரேபியா நைல் நதியோர நாடுகள் வழியாக ஆசியாவில் நுழைந்தது.

-முற்றிய வெண்டிக்காயை பேப்பர் தயாரிக்கவும் சில நாடுகள் பயன்படுத்துகின்றன.

-சில இடங்களில் வெண்டிக்காய் விதையை கோப்பித் தூளில் பயன்படுத்துகின்றனர்.

-வெண்டிக்காயில் உள்ள தார்ப் பொருட்களால் கொழுப்புக் கரையும். மலச்சிக்கல் நீங்கும்.

-அமெரிக்காவில் பிஞ்சு வெண்டிக்காயை நறுக்கி முட்டையில் தோய்த்து பாண்தூள் அல்லது சோளன் மாவில் புரட்டி பொரித்துச் சாப்பிடுகிறார்கள்.

-வெண்டியின் காய், இலை, பிஞ்சு விதை, வேர் அனைத்துமே மருத்துவக் குணங்கள் நிரம்பியவை.

-தமிழர்கள் பிஞ்சுக்காய்களை குழம்பாகத் தயாரித்து உணவில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

-வெண்டிப் பிஞ்சுடன் சீனி சேர்த்து சாறுபோல் தயாரித்து அருந்தினால் இருமல், நீர்க்கடுப்பு, எரிச்சல் தணியும்.

-வெண்டிக்காயை எப்போதும் உணவில் சேர்த்துவர குழந்தைகளின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

-அனைத்துத் தரப்பினரின் மூளை வளர்ச்சிக்கு மிக முக்கிய காய்கறியாக வெண்டிக்காய் விளங்குகின்றது.

செல்வி.சி.சுஜீவா
ரூத் மிஷன்-கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பாலில் வளரும் புத்திசாலிக் குழந்தைகள்.

இன்றைய பெண்கள் தாய்ப்பால் கொடுப்பதையே விரும்புவதில்லை என்பது கசப்பான உண்மையாகும். அவ்வாறு கொடுத்தால் தங்களின் அழகு கெட்டுப்போய் விடுமோ என்று நினைப்பதுதான் அதற்குக் காரணம். இது எவ்வளவு பெரிய தவறு என்பதை இங்கே படியுங்கள்.. தாய்ப்பால் இயற்கையானது அதில் எந்தவித கலப்படமும் செய்ய இயலாது தாய்ப்பாலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிக அளவில் இருக்கின்றது. இன்னும் பல சிறப்புக்களைப் பார்த்தால்..

-குழந்தைகளுக்கு ஆஸ்த்துமா எதிர்ப்புச் சக்தி அதிகமாகக் கிடைக்கின்றது.
-புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளைவிட தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் புத்திசாலித்தனம் கூடியவர்களாக இருப்பார்கள்.
-எடை அதிகமில்லாதவர்களாக வளர்வார்கள்.
-அலர்ஜி நோய் சுலபமாக இவர்களை நெருங்காது.
-வயிற்றுப்போக்கை உருவாக்கும் நோய்க்கிருமிகளை தாய்ப்பாலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தி விரட்டியடிக்கின்றது.
-நுரையீரல் கோளாறுகள் வருவது குறைவடைகின்றது.
-உணர்வு பூர்வமாக நிலையானவர்களாகவும் தாயாருடன் நன்கு பழகுபவர்களாகவும் இருப்பார்கள்.

## தாய்ப்பால் கொடுப்பது தாய்க்கு எவ்விதத்தில் நன்மை

குழந்தை பாலை உறிஞ்சிக் குடிப்பதால் தாயின் வயிற்றுப் பகுதி விரைவிலேயே தட்டையாகின்றது. இவர்களுக்கு மார்பகத்திலும் கர்ப்பப் பையிலும் எலும்புத் திசுக்களிலும் புற்றுநோய் வருவது குறைவாக இருக்கின்றது. தாய்ப்பால் தருவதால் விலைகொடுத்துப் புட்டிப்பால் வாங்கவேண்டிய அவசியமில்லை. வேறு சத்தான ஆகாரமும் தேவையில்லை. இந்தச் செலவும் குடும்பத்திற்கு மிச்சமாகின்றது. உயிர்ச்சத்து நிறைந்த தாய்ப்பால் பிள்ளையின் முழு ஆரோக்கியத்துக்கும் மூலகாரணமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு மனிதர்கள்.

தற்போது உலகில் வாழும் 100 பேருக்கு என்ற வீதத்தில் இந்தப் புள்ளி விபரம் வெளியாகியுள்ளது.

## சமயங்களைச் சார்ந்தவர்கள் 100 பேருக்கு.

| | |
|---|---|
| கிறிஸ்த்தவர்கள் | - 33 வீதம் |
| முஸ்லீம்கள் | - 22 " |
| இந்துக்கள் | - 14 " |
| சமயங்களைச் சேராதவர்கள் | - 12 " |
| ஏனைய மதத்தவர்கள் | - 12 " |
| பௌத்தர்கள் | - 07 " |

## நிறை அளவு 100 பேருக்கு.

| | |
|---|---|
| சாதாரண நிறையுடையவர்கள் | - 63 வீதம் |
| அளவுக்கு அதிகமான நிறைகூடியவர்கள் | - 21 " |
| அளவுக்குக் குறைவான நிறையுடையவர்கள் | - 15 " |
| வித்தியசமான நிறையுடையவர்கள் | - 01 " |

## எழுதப் பேசத் தெரிந்தவர்கள் 100 பேருக்கு.

| | |
|---|---|
| எழுதவும் பேசவும் வாசிக்கவும் தெரிந்தவர்கள் | - 83 வீதம் |
| எழுத பேச வாசிக்கத் தெரியாதவர்கள் | - 17 " |

## தாய்மொழி பேசுபவர்கள் 100 பேருக்கு.

| | |
|---|---|
| தனிநாடு தனிமொழி எனப் பேசுபவர்கள் | - 70 வீதம் |
| சீன மொழி பேசுபவர்கள் | - 12 " |
| ஸ்பானிஸ் மொழி பேசுபவர்கள் | - 05 " |
| ஆங்கில மொழி பேசுபவர்கள் | - 05 " |
| அரபு மொழி பேசுபவர்கள் | - 05 " |
| ஹிந்தி மொழி பேசுபவர்கள் | - 03 " |

தகவல்.- W.I.R.A. Web for Interdisciplinary Research+Expertise.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கு இன்னும் அறம் அழிந்து போகவில்லை.

ஸ்ரீதரன் – சுரு

நட்புறவு யாத்திரை நடத்தி பெரும் ஆரவாரம் எதுவும் செய்யாமல் யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் ஒரு புற்று நோய் ஆஸ்பத்திரியை கட்டிக் கொடுத்தவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் தமிழ் சிங்கள சமூகங்களைச் சேர்ந்த சில இளம் மனிதர்களின் முன்னெடுப்பில் இது சாத்தியமாகி இருக்கிறது.இந்த வைத்தியசாலையை அமைப்பதற்கு சமூக அக்கறையுள்ளவர்கள் நிதி-நிலம் என்பவற்றை வழங்கியிருக்கிறார்கள் .கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்றலன்றி நாட்டதில் கொள்ளாத மனிதர்கள் ஆதிக்கம் செலுத்தும் நாட்டில்- சமுதாயத்தில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள் .தமது எண்ணங்களை முன் நிறுத்தி பெருவாரியான சாமானியமக்களின் புலம் பெயர்ந்தவர்களின் ஆதரவுடன் இந்த சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள் .சிறுவர்கள் தமது உண்டியல்களைக் கூடக் கொடுத்தார்களாம். புலம்பெயர்ந்த வைத்தியர் ஒருவர் நாலரைக்கோடி உதவியிருக்கிறார்.

அதனை முன்னெடுத்த ஒருவரின் தந்தை தனது வயதில் நாட்கள் இவர்களுடன் சேர்ந்து நடந்திருக்கிறார். இவர்களில் சிலரின் உறவுகளும் புற்றுநோயால் மரணமாகியிருக்கிறார்கள். அவர்கள் 300 மில்லயன்களுக்குமேல் திரட்டி சாதித்திருக்கிறார்கள். மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் ஒவ்வொரு உதவிக்கும் சதத்திற்குமான கணக்கையும் வைத்திருக்கிறார்கள். இதற்காகக 700 கிலோ மீற்றர்கள் வரை நடந்திருக்கிறார்கள்.ஊரை அடித்த உலையில் போடும் இலட்சிய புருசர்களாக நாடகமாடும் அரசியல்வாதிகள் நிறைந்த சமூகத்தின் மத்தியில் இது நிகழ்திருக்கிறது. ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற அறக் கூற்றுக்கள் நிறைந்த மொழி கொண்ட சமூகத்தின் அரசியல் அறம் இப்படித்தான் இருக்கிறது விதிவிலக்குளாக சிலர் இருக்கிறார்கள் .இந்த ஆஸ்பத்திரியைக்கட்டியவர்கள் சமூக முன்னோடிகள். இவர்கள் விளம்பரத்திற்காக எதையும் செய்யவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் சமாதானத்திற்கும் நட்புறவுக்குமான நடைபயணத்தை அவர்கள் தெற்கில் இருந்து ஆரம்பித்தார்கள்.அப்போதுதான் இந்த எண்ணம் உருவாகியிருக்கிறது. வடபகுதி புற்றுநோயாளர்கள் மஹறகம கண்டி கொழும்பு என்று அலைவதில் எத்தனை சிரமம் என்பது அதனை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும் இங்கு தேவை அறிந்து காரியமாற்றியிருக்கிறார்கள்.

'வையத்துள் வாழ்வாங்கு' வாழ்பவர்கள் இவர்கள் தான்.வரலாற்றில் இப்படியான மனிதர்கள் உருவாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.எமது நாளாந்த பிரதான பிரச்சனைகள் என்னவென்று அடையாளம் கண்டு கொள்வதில் இம்மாதிரியானவர்களின் அனுபவங்கள் முக்கியம்.இனமத பேதம் கடந்து இந்த பேருதவி பெரும்பாலும் சாதாரண மக்களால் வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கு வாழ்வதற்கான நம்பிக்கைகளை ஏற்படுத்துபவர்கள் இவர்கள் தான்.இந்த நாட்டில் சமூகங்களிடையே நல்லிணக்கத்தை கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கையை இவர்கள் ஏற்படுத்துகிறார்கள்.

## நோய்!.

1. இலங்கையில் கடந்த ஆண்டில் பல்வேறுவகை புற்று நோய்களால் சுமார் 14.000 பேர் இறந்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2. இலங்கையில் புகைத்தல் பழக்கத்தால் நாளொன்றுக்குச் சராசரியாக 60 பேர் இறப்பதாகவும் ஒருவருடத்தில் சுமார் 20.000 பேர் இறந்துவிடுவதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

3. இலங்கையில் புற்றுநோயால் வருடந்தோறும் சுமார் 25.000 நோயாளர்கள் புதிதாக உருவாகிறார்கள் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

4. இலங்கையில் ஒவ்வொரு ஆண்டிலும் சுமார் 2.000 பேர் தொழுநோயாளர்களாக உருவாகிவருகிறார்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்கள்:

ஈழத்துத் தமிழ் திரைப்படங்களின் தயாரிப்பு முயற்சிகள் முன்னரே பலராலும் முன்னெடுக்கப்பட்டே வந்துள்ளதுசமுதாயம்,பாசநிலா தொடங்கி இன்று வரை தொடர்கிறது.வி.பி.கணேசனால் தயாரிக்கப்பட்ட புதிய காற்று,நாடு போற்ற வாழ்க,நான் உங்களின் ஒருவன் கையைச் சுட்டுக்கொள்ளாத படங்களாகும் என கருதுகிறேன்.அதேபோல் வாடைக்காற்றும் அப்படியே.நிர்மலா சுமாரான படம்.எனினும் தயாரிப்பாளரால் மீண்டும் ஒரு படம் தயாரிக்க முடியவில்லை. குத்துவிளக்கும் பாடசாலை மாணவர்களுக்கென சிறப்புக் காட்சிகள் காண்பிக்கப்பட்டன.படைப்புலகின் பிரபலங்கள் நடித்த பொன்மணி அவ்வளவாக ஓடவில்லை.சிங்களத்தமிழ்ப்படம் என்று தமிழகப் பத்திரிகையில் வந்ததாகச் சொல்வர்.இசையமைப்பாளர் சண்"இளையநிலா' 'எனும் படத்தை எடுத்தார். கலாவதி,முத்தழகு,எஸ்.பி.பாலசுப்பிரமணியம்,எஸ்.பி.சைலஜா போன்றோ பாடிய பாடலுக்கு இலங்கை வானொலி அறிவிப்பாளராகக் கடமையாற்றிய ராஜகுரு சேனாதிபதி.கனகரத்தினம் பாடல்களை எழுதியிருக்க சண் இசை அமைத்திருந்தார்.இலங்கை வானொலியில் அறிவிப்பாளர் கே.எஸ்.ராஜாவின் குரலில் விளம்பரமும் போனது.

அதே போலத் தான் நண்பர்கள் சேர்ந்து லெனின் மொறாயஸின் இயக்கத்தில் நல்லூர்.மனோகரன்,ஹெலன்குமாரி,சந்திரகலா,சற்குணம் போன்றோரின் நடிப்பில் சினிமாஸ்கோபின் தயாரிக்கப்பட்டது.நேசன் அவர்களால் சிறப்பான முறையில் சண்டைக் காட்சிகள் எடுக்கப்பட்டிருந்தது.இவ்விரு படங்களும் 83 இனக்கலவரத்தின் போது அழிக்கப்பட்டன.வெளிவந்திருந்தால் நல்லதொரு பதிவை ஈழத்து திரைப்பட வரலாறு சொல்லியிருக்கும்.சர்மிளாவின் இதயராகம் வசூலினைப் பெற்ற படம் என்று சொல்லுவர்.
இதற்கிடையே மொழிமாற்றம் செய்யப்பட்ட திரைப்படங்களும்(சுமதி எங்கே,கலியுக காலம்,யார் அவள்,நான்கு லட்சம் இன்னும் பல),இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்புகளும் வந்து போயின.(நங்கூரம்,மாமியார்
நடிப்பில் சினிமாஸ்கோபின் தயாரிக்கப்பட்டது.நேசன் அவர்களால் சிறப்பான முறையில் சண்டைக் காட்சிகள் எடுக்கப்பட்டிருந்தது.இவ்விரு படங்களும் 83 இனக்கலவரத்தின் போது அழிக்கப்பட்டன.வெளிவந்திருந்தால் நல்லதொரு பதிவை ஈழத்து திரைப்பட வரலாறு சொல்லியிருக்கும்.சர்மிளாவின் இதயராகம் வசூலினைப் பெற்ற படம் என்று சொல்லுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நங்கூரம்,மாமியார் வீடு, இரத்தத்தின் ரத்தமே நீலக் கடலின் ஓரத்திலே,பைலட் பிரேம்நாத் ,மோகனப்புன்னகை, தீ,) தோட்டக்காரி படத்தைத் தந்த கிருஸ்ணமூர்த்தி மீனவப் பெண் எனும் திரைப்படத்தையும் தந்தார்.உதயகுமார்,சிறிசங்கர்,பாலன் போன்றோரின் நடிப்பில் வெளிவந்தமஞ்சள்குங்குமம் பலவருடங்களின் பின் சில மாற்றங்களுடன் மீண்டும் திரைக்கு வந்தது.உதயகுமாரின் நல்ல நடிப்பைப் பார்க்க முடிந்த படம்.காத்திருப்பேன் உனக்காக,கோமாளிகள்,ஏமாளிகள்,மாமியார் வீடு தொழில் நுட்பங்கள் சிறப்பென்று சொல்ல முடியாவிட்டாலும் அதில் நடித்த கதாநாயகர்கள் பேசப்பட்டனர்.புகழ் பெற்ற நாடகக் கலைஞர்கள் நடித்து வெளிவந்த வாடைக்காற்று முதலில் நாவலாக வெளி வந்து வரவேற்பை பெற்றிருந்ததாலும்,விளம்பரங்களிலும் அதிக கவனம் செலுத்தியதினாலும் வசூலிலும் நம்பிக்கையைத் தோற்றுவித்தது.கடமையின் எல்லை,
டாக்ஸி ட்றைவர், நிர்மலா,வெண்சங்கு,தென்றலும் புயலும்,தெய்வம் தந்த வீடு,அநுராகம்,எங்களில் ஒருவன்,நெஞ்சுக்கு நீதி,அவள் ஒரு ஜீவநதி,பாதை மாறிய பருவங்கள் நல்ல பதிவுகளைக் கொண்ட படங்கள்.கதை சொல்லும் முறை,நடிப்பு,காட்சி ஒருங்கிணைப்பு,பாத்திரங்களின் மொழி அமைப்பு போன்ற பலவற்றில் முடிந்தளவு முயன்றுள்ளனர்.

இந்திய,மேல் நாட்டு திரைப்படங்களைப் பார்த்து மோகித்தவர்களால் இத் திரைப்படங்களைப் பார்க்க முடியவில்லை.மேலும்,இனக் கலவரம்,இன விடுதலை போராட்டம் பலரை இடம்பெயரச் செய்ததும்,பலரும் அதற்குள் உள்வாங்கப்பட்டு நல்ல படிப்பைத் தருவதில் முனைப்புக்காட்ட முனைந்தனர். குறும்படங்களின் மூலமும் அவர்கள் தம்மை வளர்த்துக்கொள்ள,அப் பயிற்சியின் மூலம் முழு நீள திரைப்படங்களை தயாரிக்கும் திறனையும் வளர்த்தார்கள். வன்னியில் நிதர்சனம் மூலம்தயாரிக்கப்பட்ட குறுந்திரைப்படங்கள்,பின் ஆணிவேர்,எல்லாளன் போன்ற திரைப்படங்கள் நல்ல வெளிபாட்டைத் தந்து ரசிகர்களிடம் பெரும் வரவேற்பையும் தந்தன.இன்று நெடுந்தீவு முகிலன்,மதிசுதா போன்று பலர் குறும் படம் மூலமும் பயிற்சிக்களத்தை உருவாக்கி வருகின்றனர் புலம்பெயர்ந்தவர்களும் தமது கல்வி,கணினிப் பயிற்சி என பலவற்றின் மூலம் தமது தேடலை படைப்பிலக்கியமாகவும்,குறும்படங்கள்,திரைப்படங்களாகவும் வெளிப்படுத்திவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திலும்,புலம்பெயர் நாடுகளில் நிறுவப்பட்ட திரைத்துறைசார் நிறுவனங்கள், அமைப்புக்கள் போட்டிகளை நடத்தியும்,பயிற்சிப்பட்டறைகளைம் அதன் மூலம் பரிசுகள்,விருதுகளையும் கொடுத்து ஊக்குவிக்கின்றனர். இப்போது இலங்கையிலும் அமைப்புக்கள் போட்டிகள் மூலம் தெரிவாகும் நிலை தோன்றியுள்ளதும் ஆரோக்கியமாகவே உள்ளன எனலாம்..

இன்று பல கலைஞர்கள் உற்சாகத்துடன் களம் இறங்கியும் உள்ளனர். தமிழியம்.சுபாஸ்,பாஸ்கரன்(மன்மதன்)லெனின்.எம்.சிவம் போன்ற பலர் முனைப்புடன் செயல்பட்டுவருகின்றனர்.
லண்டனில் மண்,'சிவசேனா',தமிழ்.எம்.ஐ- 7,ஆவும் வசப்படும் எனப் பல திரைப்படங்கள் பெரிதாகப் பேசப்படுகின்றன.டென்மார்க்கிலும் அப்படியே. சண்.கி.சே.துரை போன்றவர்கள் திரைப்படத் துறையில் ஆரோக்கியமாக செயல்படுகின்றனர்.கனடாவும் பேசப்படும் கலைஞர்களை உள்வாங்கியுள்ளன. தற்போது வெளி வந்திருக்கும் 'GUN & RING திரைப்படம் நிறைய எதிர்பார்ப்புடன் வந்து பலரையும் நிமிரவைத்துள்ளன.பத்திரிகைகள்,ஒலி,ஒளி ஊடகங்களும் சிலாகித்துப் பேசவைத்துள்ளதை ஈழத்து திரைப்படவரலாறு இனி சிறந்த பதிவுகளைத் தரும் என்றே கூறமுடியும்.

முல்லை அமுதன்
லண்டன்.

## வெள்ளி விழா!.

உங்கள் மண் சஞ்சிகை எதிர்வரும் **2015** தை மாதம் தனது **25**வது ஆண்டை நிறைவுசெய்து வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ளதுவெள்ளி விழாவையொட்டி சிறுவர் இளையோர், வாசகர்களிடையே பல வகையான போட்டிகளை நடாத்தவுள்ளது. ஆகவே தொடர்ந்து மண் சஞ்சிகையைப் படியுங்கள். இவ்விழா பற்றிய உங்கள் கருத்துக்களை அன்போடு எதிர்பார்க்கிறோம்!.

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறர் நலம் பேண சேவை செய்வோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்" என்பது வள்ளுவர் வாக்காகும். இதற்கமைய நாம் பிறர் நலம் பேணச் சேவை செய்ய வேண்டும்.

காவியங்களை எடுத்துக் கொண்டால் சிபிச்சக்கரவர்த்தி புறாவுக்காக தன் உடலையே அர்ப்பணித்தார். மனுநீதிகண்ட சோழன் பசு மாட்டிற்காக தன் மகனைத் தேரை ஏற்றிக் கொல்லுமாறு கட்டளையிடுகின்றார்.

குமண வள்ளல் சீத்தலைச் சாத்தனாரின் வறுமையினைப் போக்குவதற்கு உதவி புரிகின்றார்.

தாவிகள்பெருமான் மகனுக்காக பிணை நிற்கின்றார். இவை எல்லாம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது.

அன்னைதிரேசாவை எடுத்து நோக்கினால் அவர் தன்னை இளவயதிலிருந்தே துறவியாக்கிக்கொண்டு எழைகள் ஆதரவற்றவர்கள் நோயாளிகள் கைவிடப்பட்டவர்களை ஆதரித்து அன்பைக் காட்டினார்.

ஏன் நம்மோடு வாழ்ந்த தெல்லிப்பளை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சமயப்பணியோடு சிறுவர் இல்லம் இளையோர் இல்லம் முதியோர் இல்லங்கள் நிறுவி இறக்கும் வரை சேவை செய்தார்.

காந்தி அடிகளை நோக்கினால் அவர் பாரத தேசத்துக்கு கத்தியின்றி இரத்தம் இன்றிப் போராடி அஹிம்சை வழியில் விடுதலை பெற்றுக் கொடுத்தார்.

சென்ற வருடம் காலமான நெல்சன் மண்டலே இருபத்தேழு வருடங்கள் சிறையில் வாடி விடுதலைபெற்று ஒரு தேசத்தின் ஜனாதிபதியாக வந்து நாட்டு மக்களின் ஒற்றுமைக்கும் விடுதலைக்கும் அளப்பரிய தியாகம் செய்தாரே.. எனவே நாமும் பொதுச் சேவையைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்வோமாக..

செல்வி.ய.நிவேதா
ஸ்ரீத் மிஷன்-கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபது ஆண்டுகளுக்கு மேல் இன்னும் எழுதுகிறார் கோபு!.

கோபு, எஸ்,எம்.ஜி என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டவர், இலங்கையின் மூத்த தமிழ் பத்திரிகையாளர் திரு,எஸ்,எம் கோபாலரத்தினம் அவர்கள்.,இந்த வருடம் எண்பத்தினான்கு வயதை எட்டித்தொடும் திரு கோபு அவர்களின் கைகள் தொடர்ந்தும் எழுதிக்கொண்டே இருக்கிறது என்பதை அறியும்போது,மகிழ்ச்சியாக இருக்கிறது.பத்திரிகைத்துறையில் தனக்கென ஒரு சிறப்பைப்பெற்றவர் திரு கோபு அவர்கள் 1950ல் வீரகேசரியில் படிதிருத்துனராகச்சேர்ந்து,படிப்படியாக எழுத்துத்துறையில் பெருவளர்ச்சிகண்டவர் திருகோபு. அறிவாளிகள், வாழும்போதே கௌரவிக்கப்படவேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லாதவன் நான். சாதனை வீரனாக எழுத்துத்துறையில்,பல பேரின் பாராட்டைப்பெற்ற மூத்த பத்திரிகையாளர் கோபு அவர்களை, யேர்மனியில் இருந்து வெளிவரும் "மண்"சஞ்சிகை. இந்தமாதம் அவரது அட்டைப்படத்துடன் வெளிவருகிறது,அவரைப்பற்றிய சிறப்புக்கட்டுரை ஒன்றை எழுதித்தருமாறு, ஆசிரியர் திரு சிவராசா அவர்கள், என்னிடம் கேட்டபோது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.அவர் யேர்மனிக்கு வந்திருந்தபோது அவருடன் பழகிய நாட்களை மறந்துவிடமுடியாது.சிரித்த முகமும் சீரிய பார்வையும் இப்போதும் என் கண்களில் நிலைத்து நிற்கிறது.அவர் மூன்று தடவை ஜேர்மனி வந்திருக்கிறார்.மூன்றுதடவையும் அவரோடு வாழ்ந்திருக்கிறேன்,அவரது மூத்த மகன் கபிலன் குடும்பம்.எங்கள் குடும்பத்துடன் நெருங்கிய நட்புக்கொண்டிருப்பதால் எனக்கு அந்தச்சந்தர்ப்பம் கிடைத்தது.மண் ஆசிரியரின் வேண்டுதல் எனக்கு வரப்பிரசாதமாக அமைந்தபடியால், இந்தக் கட்டுரையை வாசகர்களாகிய உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

யார் இந்தக்கோபு, திருமலை நிலாவெளியைச்சேர்ந்த திரு,முத்துக்குமாருவுக்கும்,மட்டக்களப்பு,பாண்டிருப்பைச்சேர்ந்த தங்கச்சியம்மாவுக்கும் ஆயிரத்து தொழாயிரத்து முப்பதாம்ஆண்டு யாழ்ப்பாணத்தில் மகனாகப் பிறந்தார். யாழ்ப்பாண வைத்தீஸ்வராக்கல்லூரியில் படிப்பை முடித்தபின் கொழும்பில் ஒரு உணவு விடுதியில் வேலையில்சேர்ந்தார்.எழுத்தின்மீத்கொண்ட ஆர்வத்தினால் வீரகேசரியில் வேலைகேட்டுச்சென்றிருந்தார். ஒருகிழமைக்குள் எப்படியாவது வேலைக்குவருவேன் என்று நம்பிக்கையோடு திரும்பியவர்.அந்த ஒருகிழமைக்குள் படிதிருத்தினர் நியமனம் கிடைத்து,வேலையில் அமர்ந்தார். கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளுக்கு மேல் அவர்எழுத்துப்பணியில் சிறப்போடுசெயல்பட்டுக்கொண்டுவருவதற்கு அவர் அதன்மீது வைத்திருக்கின்ற பற்றுதலே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைத்தர்மத்திற்குட்பட்டு நினைத்ததை எழுத்தில் கொண்டு வந்ததால்தான், அவரைப்பற்றி தமிழ்கூறும் நல்லுலகம் இன்றும் மறவாதிருக்கிறது.இன்று மட்டக்களப்பில் அவரின் மூத்தமகள் குடும்பத்துடன்,வாழ்ந்து வரும் கோபு.சந்தர்ப்பம் கிடைக்கும்போது யாழ்ப்பாணம் கொழும்பு என்று போய், வந்து கொண்டிருக்கிறார்.சென்ற வருடம் அவரது எழுத்துப்பணியில் அறுபது ஆண்டுகள் நிறைவைக்கொண்டாடுமுகமாக யாழ்ப்பாணத்திற்கு அழைத்த கலைவாணர்நாடக மன்றம் சிறந்த மூத்த பத்திரிகையாளர் எனப்பாராட்டி,மகிழ்ந்தது. .இரண்டாயிரம் ஆண்டில் கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கம்,மறைந்த பத்திரிகையாளர், எஸ்,ரி சிவநாயகம் ஞாபகார்த்தமாகச் சிறந்த பத்திரிகையாளர்,விருது வழங்கிக் கௌரவித்தது.அதன்பிறகு அந்த விருது யாருக்கும் இதுவரை கிடைக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த மூத்த பத்திரிகையாளர் விருதும்,தங்கப்பதக்கமும் இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு அவரைக்கிளிநொச்சிக்கு அழைத்த விடுதலைப்புலிகளின் தலைவர். திருவே.பிரபாகரன் வழங்கிக் கௌரவித்திருந்தார்.இரண்டாயிரத்துப்பத்தாம ாண்டு அனைத்திலங்கை ஊடகவியலாளர் சங்கத்தினால் தங்கப்பதக்கம் வழங்கி சிறந்த சாதனை, ஊடகவியலாளர் பட்டமும் வழங்கப்பட்டது. அவர்யேர்மனிக்கு வந்திருந்தபோது இரண்டு முறை யேர்மன் தமிழ் எழுத்தாளர்சங்கம்,அவரது நூல்களை வெளியிட்டு வைத்ததுடன்,பதக்கமும் வழங்கி கௌரவித்திருந்தத்.இந்நிகழ்வில் அவருடன் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய எழுத்தாளர்களும்,பிரான்ஸ்,சுவிஸ் போன்ற நாடுகளில் இருந்து வந்து பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்ததை மறக்கமுடியாது.

வீரகேசரியில்தொடங்கிய அவரதுபத்திரிகைப்பயணம்,ஈழநாடு,ஈழமுரசு,செய்திக் கதிர், ஈழநாதம், தினக்கதிர்வரை நீடித்தது.1987ம்ஆண்டுஒக்ரோபர்மாதம்10ந்த "கதியாழ்"ஈழமுரசு" அலுவலகம் இந்திய இராணுவத்தினால் தகர்க்கப்பட்டது. சிலதினங்களில் புதிய"ஈழமுரசு"பதிப்புகளை என்னால் காணமுடிந்தது.இது எப்படிச்சாத்தியம் என்று என் மனதில்தோன்றிய வினாவுக்கு,என்ன இடையூறு வந்தாலும்,தடங்கல் ஏற்பட்டாலும் கோபாலரத்தினம் பேப்பர் விடுவான் என்று எனக்குத்தெரியும் என்று ஒரு முதியவர் சொன்னது, இன்றும் என்காதில் ஒலிக்கிறது.அதன்பிறகே இவர் எழுதிய தலையங்கங்களைத்தேடி அலைந்தேன்,என பாரீஸ் ஈழமுரசு ஆசிரியர் திரு பரணி அவர்கள் இவரது தொகுப்பில்எழுதிய அணிந்துரையில் இதைக்குறிப்பிடுகின்றார்'செய்திகளை சான்றோடு எடுத்துக்கூறுகின்ற திறமும்,மக்களுக்கு எளிதில் விளங்குகின்ற நடையில் செய்திகளை எடுத்துக்கூறும் பாங்கும் அவரது சிறப்பியல்பு" என்கிறார்.இவரதுநீண்டகாலநண்பரான காலம் சென்ற பேராசிரியர் கா.சிவத்தம்பியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பத்திரிகைத்துறையில் பிரதம ஆசிரியராக வாழ்ந்த காலத்தின் இறுதிநாட்கள் முக்கியத்துவம் வாய்ந்ததும்,அபாயகரமானதும்கூட. அந்தநிலையிலும்,துணிந்து நின்றுசெய்திகளை மக்கள் மத்தியில்கொண்டு சேர்த்தவர். யாருக்கும் அடிபணியாது தனக்கெனப்பட்டதும்,அதிலும் அவசியமானதையும் செய்திகளாக்கினார்.இதனால்தான் இவர் இந்திய ராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிலகாலம் சிறையில்வாடினார்.அவரது திறமைமிக்க சாதுரியத்தினால் அங்கிருந்து விடுதலைபெற்று இந்தியா சென்றார்.இந்தியாவில் இருந்து கொண்டே யூனியர் விகடனில்"ஈழமண்ணில் ஓர் இந்தியச்சிறை" என்ற தன்னுடைய சிறைவாழ்க்கையை தொடராக வெளியிட்டார்.இந்தத்துணிவு கோபாலரத்தினத்திற்கே உரியதென்பேன். அவருடன் எழுத்துலகில் பயணம் மேற்கொண்டவர்கள்உலகத்தின் பலநாடுகளில்வாழ்கிறார்கள்.அவர்கள்எல்லோருக்கும்,குருவாகவும்,நல்ல நண்பராகவும், இன்றும் விளங்கிக்கொண்டிருக்கும்கோபு எல்லோருக்கும் விருப்பமான நல்லமனிதர்."ஈழமண்ணில் ஒரு இந்தியச்சிறை" "அந்த ஒருஉயிர்தானா உயிர்" "எழுத்துப்பணியில்ஐம்பது ஆண்டுகள்" அவரால் எழுதி வெளியிடப்பட்ட தொகுப்புகளாகும்.ஆயிரத்திற்குமேற்பட்ட தலையங்கங்களை எழுதிக்குவித்திருக்கிறேன் என்று கோபுவே ஒருதொகுப்பில் குறிப்பிட்டிருக்கின்றார்.அடுத்ததொகுப்பொன்றை எழுதிவெளியிடுவதற்கான ஆயத்தங்கள்நடைபெற்றதைநான்அறிந்திருந்தேன்,ஏனோஇதுவரை அது வெளிவரவில்லை.ஆனாலும்விரைவில்வெளிவருமென்று நம்பிக்கையோடு காத்திருப்போம்.

ஒரு எழுத்தாளனைத் திறமை மிக்கவனாக வெளிக்கொணர்வது அந்த எழுத்தாளன் வாழ்ந்த காலத்தையும் பொறுத்தது.அறுபதுகளில் யாழ் ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்து, பிரதமஆசிரியராகி தனது உழைப்பால் உயர்ந்தவர் திரு கோபாலரத்தினம் அவர்கள். அரசியல் சூழலும்,அதனால் எழுந்தநெருக்கடி மிகுந்த காலகட்டமும்,போரின் கொடுமையும் அதை மக்கள் மத்தியில் உடனுக்குடன் கொண்டுசேர்த்த விரைவும். அவரின்எழுத்துக்களை மெருகேற்றியது என்பதை யாராலும் மறுக்கமுடியாது.1959களில். வீரகேசரியில் வேலைசெய்தகாலத்தில்,அவரது பத்திரிகை அலுவலக நண்பராக இருந்த திரு,டிறோஸ் அவர்களின்சகோதரி குயின்சி இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்தார். அவர்மீதுகாதல்கொண்டகோபு, அவரையே திருமணம் செய்துகொண்டார். கத்தோலிக்கரான குயின்சி திருமணத்தின்பின்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமையற்ற மதச்சுதந்திரத்துடன் இறுதிவரை வாழ்ந்தார், என்பதே நானறிந்த விடையமாகும். தன்னையும், தனது குடும்பத்தையும், அன்போடு வழிநடத்திச் சென்றவள் எனது மனைவி குயின்சிதான் என்று அவர் எனக்குக் கூறியபோது அவரது கண்கள் பனித்ததை நான்பார்த்தேன்.அவள்இன்று உயிரோடு இல்லை நாம் ஒன்றாகவாழ்ந்தபோது எமக்கு மதம் ஒருதடையாக இருந்ததில்லை இறந்தபோதுதான் அந்தத்தார்ப்பரியத்தை உணர்ந்தேன். எனஅவர்எழுதிய மனைவியின் கல்வெட்டில்பதிவுசெய்திருக்கின்றார்.

கபிலன்,பார்த்திபன்,யாதவன்,என்கின்ற மூன்று ஆண்களும்,வாசுகி,தமயந்தி என்கின்ற இரண்டு பெண்களும் இவரது பிள்ளைகள்,மூன்றாவது மகன் யாதவன் இரண்டாயிரம் ஆண்டில் ஒரு விபத்தில் மரணமானார் இது அவர் குடும்பத்தில் நிகழ்ந்த இரண்டாவது இழப்பு அவரை உலுக்கி எடுத்தவைகள் கபிலன்,பார்த்திபன்,தமயந்தி, குடும்பம் தற்போதும் யேர்மனி நாட்டில்வாழ, மகள்,வாசுகியும், இரண்டு பேரப்பிள்ளைகளும்,மட்டக்களப்பில் வாழ்கின்றார்கள்.இவர்களுடன்தான் கோபு இன்று வாழ்ந்து வருகிறார்.இந்தியாவில் திருச்செந்தூரில் பலகாலம் வாழ்ந்த கோபு,திருச்செந்தூர் முருகன்மீது அளவுகடந்த பக்திகொண்டவர்.நான் இந்தியாவுக்குச்சென்றபோதும் அங்கும் இவரைச்சந்தித்திருக்கிறேன்.இந்தியாவிலும் சிறந்த பிரபல்யமான எழுத்தாள நண்பர்களின் தொடர்பை வைத்திருந்தார்.பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள் என்றால்போதும்,பாசத்தில் நெஞ்சுஉருகி நிற்பார்.எல்லோருடனும் ஒன்றாக இருக்கவேண்டுமென்பதே அவரது அவா.அந்தப்பாக்கியம் அவரது மகள் வாசுகிக்கே கிடைத்திருக்கிறது. இலங்கையில் தமிழ் ஊடகவரலாற்றில் திரு கோபு அவர்களின் பெயரும் புகழும் நிலைத்து நிற்கும் என்பது உண்மையான விடையமாகும்.புகழ் மிக்க எழுத்தாளர்கோபு அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் நோய் நொடியின்றி நலமாகவாழ்ந்து, எழுத்துலகத்திற்கு புதிய ஆக்கங்களை வழங்குவாரென ஆவலோடு காத்திருப்போம். வாழ்துகிறோம்!...

பொன்புத்திசிகாமணி.
எழுத்தாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த எழுத்தாளரும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் செயலாளருமான பிரேம்ஜி கனடாவில் காலமானர்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினரும் நீண்டகாலமாக அந்த அமைப்பின் செயலாளராகவும் பணியாற்றிய எழுத்தாளரும் ஊடகவியலாளருமான பிரேம்ஜி ஞானசுந்தரன் கனடாவில் காலமானார்.

அச்சுவேலியில் 17-11-1930 ஆம் திகதி பிறந்த ஞானசுந்தரன் தமது ஆரம்பக்கல்வியை அச்சுவேலி கிறீஸ்தவ கல்லூரியிலும் பின்னர் யாழ். பரமேஸ்வராக்கல்லூரியிலும் கற்றார். 1947 இல் தமது 17 வயதிலேயே சுதந்திர இளைஞர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். அன்றிலிருந்து ஞானசுந்தரன் தீவிரமான வாசிப்பிலும் எழுத்துத்துறையிலும் ஈடுபடத்தொடங்கினார்.

தமிழகம்சென்று மூத்த அறிஞர்கள் நாமக்கல் கவிஞர் -வி.க. வா.ரா- சுவாமிநாத சர்மா குயிலன், பேராசிரியர் ராமகிருஷ்ணன் தமிழ் ஒளி முதலானோரின் தொடர்பினால் இடதுசாரிக்கருத்துக்களை உள்வாங்கி இடதுசாரியாகவும் முற்போக்கு எழுத்தாளராகவும் இயங்கிய ஞானசுந்தரன் அங்கு கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி இதழிலிலும் பணியாற்றினார். தயாகம் திரும்பிய பின்னார் கே.கணேஷ் மற்றும் கே. ராமநாதன் ஆகியோரின் தொடர்புகளினால் இலங்கை கம்யூனிஸ்ட கட்சியின் தேசாபிமானி மற்றும் சுதந்திரன் முதலான இதழ்களிலும் ஆசிரியர் குழவில் இணைந்தார்.

தேசாபிமானியில் அவர் அக்காலப்பகுதியில் எழுதிய தேசபக்தன் கண்ணோட்டம் என்ற பத்தி எழுத்து வாசகர்களை பெரிதும் ஈர்த்தது. 1954 இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து அதன் வளர்ச்சிக்கு அல்லும்பகலும் தொண்டாற்றினார்.
சுயநலமற்ற தன்முனைப்பு உணர்வுகளற்ற பொது நோக்குடன் அவர் இயங்கியதனால் மாற்றுக்கருத்துள்ளவர்களும் அவரை நேசித்தனர். அந்த நேசிப்பே அவரை தொடர்ந்தும் பல வருடகாலமாக சங்கத்தின் பொதுச்செயலாளர் பதவியில் நீடிக்கச்செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேம்ஜி என்ற புனைபெயரில் அவர் எழுதத் தொடங்கியது முதல் பிரேம்ஜி ஞானசுந்தரன் என்ற பெயரிலேயே அவர் அழைக்கப்பட்டார்.
சங்கத்தின் கிளை அமைப்புகளான எழுத்தாளர் கூட்டுறவுப்பதிப்பகம், அறிவுவட்டம் முதலானவற்றையும் உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு தரக்கூடிய திட்டங்கள் மற்றும் தமிழகத்தின் வணிக இதழ்கள் மற்றும் தரக்குறைவான இதழ்களை இலங்கைக்கு தருவிப்பதில் கட்டுப்பாடுகள் விதிக்கும் நடைமுறைகளை அமுல்படுத்துவதிலும் யாழ். பல்கலைக்கழக வளாகம் உருவாக்கப்பட்டபொழுது அதன் முதல் தலைவராக பேராசிரியர் கைலாசபதியை நியமித்தல் தொடர்பான ஆலோசனைகளிலும் பிரேம்ஜி மிக முக்கிய பங்காற்றியுள்ளார்.
சோவியத் தூதரகத்தின் சோவியத் நாடு சோஷலிஸமும் தத்துவமும் சக்தி முதலான இதழ்களிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் புதுமை இலக்கியம் இதழிலும் ஆசிரியராக பணியாற்றினார்.

சிறந்த பத்திரிகையாளருக்கான சோவியத்தின் லெனின் விருதும் அவருக்கு கிடைத்துள்ளது. இலங்கையில் பாரதி நூற்றாண்டு விழா உட்பட பல இலக்கியம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மாநாடு, முதலானவற்றில் பிரேம்ஜியின் கடுமையான உழைப்பு குறிப்பிடத்தகுந்தது.
1971 முதல் 1975 வரையில் இலங்கை தமிழ் ஆலோசனைச்சபையிலும் யாழ். பல்கலைக்கழக அமைப்புக்குழுச்செயலாளராகவும்

இலங்கை பத்திரிகைக்குழுவில் உறுப்பினராகவும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன ஆலோசனைச்சபையின் உறுப்பினராகவும் இயங்கிய கால கட்டத்தில் பல ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுத்தார். சில உலகநாடுகளில் நடந்த இலக்கிய மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவரது பிரேம்ஜி கட்டுரைகள் 2008 இல் வெளியாகியது.
தமது இரண்டு பெண் பிள்ளைகளின் வேண்டுகோளை ஏற்று கனடா சென்றார். அவரது புலப்பெயர்வு இலங்கை தமிழ் இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகவே கருதப்பட்டது. புலம்பெயர்ந்தாலும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு தம்மாலியன்ற ஆதரவையும் அவர் வழங்கத்தவறவில்லை. அவரது எழுத்துலகப்பிரவேச பொன்னாண்டை முன்னிட்டு அவரது இலக்கிய நண்பர்கள் 1998 இல் கனதியான தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளனர்.
கொழும்பில் சில மாதங்களுக்கு முன்னர் சில மூத்த முற்போக்கு எழுத்தாளர்களை பராட்டி கௌரவிக்கும் நிகழ்வை இலங்கை முற்போக்கு கலை இலக்கிய அமைப்பு நடத்தியபொழுது பிரேம்ஜியும் பராட்டப்பட்டார்.
தமது மனைவியைம் மக்கள் மருமக்களையும் ஒரு பேரக்குழந்தையையும் உலகெங்கும் வாழும் அவரை நேசித்த இலக்கிய நெஞ்சங்களையும் விட்டு விட்டு அவர் நிரந்தரமாக விடைபெற்றுவிட்டார். எம்மிடம் எஞ்சியிருப்பது அவர் பற்றிய நீங்காத நினைவுகளே.

முருகபூபதி
letchumananm@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சகோதரி றெஜினா!. (நினைவலைகளில்)

## 70 ஆண்டுகள் அறப்பணியில்



அருட்சகோதரி றெஜினா அவர்கள் நெடுத்தீவில் பிறந்து வளர்ந்து கல்விகற்று தன்னை இறைபணிக்காக அர்ப்பணித்துவராவர். கத்தோலிக்க ஆன்மீகப்பணியில் மிக நீண்டகாலம் பணிபுரிந்தவரான இவர் கடந்த மாதம் தனது 92வது வயதில் மன்னாரில் காலமானார். யாழ்ப்பாணம் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் என ஐந்துமாவட்டங்களிலும் கடந்த 70 ஆண்டுகளாக மதப்பணிகளையும் அறப்பணிகளையும் ஆற்றி பொதுப்பணிகளின் தாயாக தன்வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்திருப்பதை நாம் வியப்புடன் நோக்கவேண்டும்.அன்னாரின் சேவைகளை நாம் பாராட்டுவோம்.

நம் தாய் நாட்டில் போர் நடைபெற்ற வேளைகளிலும் உக்கிரமடைந்து மக்கள் கடல்போல் அகதிகளாக இடம்பெயர்ந்து சென்று மன்னார் மடு தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தபோது இவர் ஆற்றிய பணிகளோ மிக.. மிக உயர்வானதும் கடினமான காரியமுமாகும்.ஒன்றா.. இரண்டா..இலட்சக்கணக்கான உறவுகள் எல்லாவற்றையும் இழந்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அகதிகளாய், ஆதரவற்றோராய், விழப்புண் உடையோராய், விதவைகளாய் ஒரு வேளை உணவுக்கோ குடிக்கத் தண்ணீருக்கோ துடித்த வேளை இந்த மக்களின் துயர்போக்கிட எத்தகைய பணிகளை ஆற்றியவர் என்பதை அப்போது வெளிவந்த மண் சஞ்சிகையில் மாதாமாதம் பிரசுரித்திருந்தோம்.

அப்போதைய அந்த துயர் நிலையில் மண் சஞ்சிகையின் வாசகர்களால் சேகரிக்கப்பட்ட பணம் பல முறை இவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு மக்களின் துயர்போக்கப் பயன்படுத்தப்பட்டது என்பதை இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கிறோம். நாம் பலமுறை அனுப்பிய பணத்தை யார்.. யாருக்கு, என்ன தேவைக்கு, எப்படிச் செலவு செய்யப்பட்டது என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களை கணக்குகளை சரியாக உறுதிப்படுத்தி உடனுக்குடன் தபால் மூலம் எமக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். மன்னார் மடுப்பகுதியில் குண்டுமழை பொழிந்த வேளைகளிலெல்லாம் காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் பாதுகாத்து உரிய கடமைகளைச் செய்தார். இப்படியாகப் பொதுப்பணிக்கே தன்னை அர்ப்பணித்த தியாகி றெஜினாவின் ஆத்ம சாந்திக்காக நாமும் இறைவனைப் பிராத்திப்போம். இவரை மண் சஞ்சிகைக்கு அறிமுகப்படுத்திய ஜேர்மனி வாழ் திருமதி. ஜெயா.நடேசன் அவர்களின் கவி ஒன்று இங்கே இடம்பெற்றுள்ளது..

ஆசிரியர்

## நீங்காத நினைவுகளில்!.

கொட்டிக் கிடக்கும் கொள்ளை அன்பு தட்டிக் கொடுக்கும் தங்கப் பண்பு கண்ணிலே மின்னல் கவிதை தொடுத்து மண்ணிலே புதைந்த வெள்ளை மலருக்குபுகழ்மாலை சூட்டி கவிதைப் பா மாலை அவர் பாதமதில் கொட்டிப் பாடுகிறேன்...

சித்திரப் பூவைப்போல் சிரித்திடும் சிரிப்பு
உற்றுப் பார்த்தால் உறுதியான நடை
அந்திப் பூ விரிவதைப்போல் அறிவை விரித்து வைத்தீர்
மாணவப் பயிர்களை அறுவடைசெய்த சகோதரி
நித்திலத்திலே கிடைத்த பெட்டகம் - அவர்
உத்தமி நீர் என்றே ஏற்று வணங்குகிறோம்
உத்தமனார் பாதமதில் உவப்போடு நீர் இருந்து
பெற்ற பெரும் அருளினால் வாழ்வூட்டினார் பலருக்கு
பெற்ற பெரும் இறைஞான அனுபவங்கள்
பகுத்தளித்துப் பக்குவமாய் நாம் வாழ
பரிவுடனே பல வழி பாதை காட்டியவர்
உப்புக் கடலுக்குள் இருக்கும் சிப்பி முத்துப்போல்
அன்பாலே அரவணைக்கும் முத்துமொழியான தாயே
மங்காத ஒளிவிளக்காய் வெள்ளைத் துகிலுடுத்திய
வெண்புறாவே.. பொன்னகையைக் காவாமல்
கல்விக்கோர் கருவறையாய் அறிவுடைக் குழந்தைகளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரமாய் பெற்றெடுத்த புன்னகைக் காவியம் அவர்
உம் நினைவுகளை நீங்காத நினைவாக நீவிர் விதைத்து
நாம் நினைக்கையிலே மறக்க முடியுமா
உமை மறந்தாலும் உளம் தாங்க முடியாதாயினும்
என்றும் அழியாப் பெயருடன் புகழுடன்
கல்லறையில் புதைக்கப்பட்ட பின்பும்
நீங்கள் தந்த இறைஞான அனுபவங்கள் மூலம்
நீங்காத நினைவாக எம் மனதில் என்றும் இருப்பீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்!...

திருமதிஜெயாநடேசன்.
ஜேர்மனி.

## ரேடியத்தைக் கண்டுபிடித்தவர்.

### உரிமையை சொந்தமாக்காத மேரிகியூ ரி அம்மையாரின் மேன்மை!

ரேடியத்தைக் கண்டுபிடித்த மேரிகியூரி அம்மையாரிடம் அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர், உங்களுக்குவேண்டியதைக் கேட்கச் சொன்னால் என்ன கேட்பீர்கள்? என்றுகேட்டார். அதற்கு மேரிகியூரி, எனது ஆராய்ச்சியைத் தொடர ஒரு கிராம் ரேடியம் தேவைப்படுகிறது, ஆனால் அது ஒரு லட்சம்டாலர் விலை என்பதால் என்னால் வாங்க முடியவில்லை என்றார் ஏக்கத்துடன்.

அந்தப் பத்திரிகை ஆசிரியை அமெரிக்கா சென்று ஒரு குழு அமைத்து, பொதுமக்களிடம் நிதி திரட்டினார். அந்தப் பணத்தில் ஒரு கிராம் ரேடியம் வாங்கி, அமெரிக்க ஜனாதிபதி கையால் மேரிகியூரிக்கு அளிக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்.அந்த நிகழ்ச்சியில் ரேடியத்தை வழங்கும் பத்திரத்தைப் படித்துப்பார்த்த மேரிகியூரி, தனது பெயருக்கு எழுதப்பட்டிருப்பதைக்கண்டார். அதைத் தனது ஆராய்ச்சி நிறுவனப் பெயருக்கு மாற்றி எழுதச் சொன்னார் மேரிகியூரி. அந்த ரேடியம் தனக்குப் பின் தன்சந்ததியினரின் உடமை ஆகிவிடக்கூடாது என்பதில் மேரிகவனமாக இருந்தார். அந்தக் கவனம்தான் பொதுநலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி**

Tamilischer Schriftsteller Verein - Deutschland

Tamil Writers Association - Germany

## அன்பான எழுத்தாளர்களே!

**19.02.2014.**

## கட்டுரைத் தொகுப்பு

எமது எழத்தாளர் சங்கத்தின், இந்த வருடத்திற்கான செயற்திட்டங்களில் (2014) கட்டுரைத் தொகுப்பு நூல் ஒன்றினை வெளியீடு செய்யவுள்ளோம். நமது சங்கத்தால் யோ்மன் நாட்டில் வாழும், தமிழ் எழத்தாளர்களின் பெரும் ஒத்துழைப்புடன் சிறுகதைகளையும், கவிதைகளையும் தொகுத்து வெளியீடு செய்தமையை நீங்கள் நன்கு அறிவீர்கள். இவ்வகையில் கட்டுரைத் தொகுப்பையும் தங்களின் பெரும் ஆதரவுடன் வெளியீடு செய்வதற்கு முன்வந்துள்ளோம். இதற்கான முழ ஆதரவினையும் தருவீர்கள் என நம்புகின்றோம்.

புலம்பெயர்ந்து பல ஆண்டுகளாக வாழும் நாம், இந்நாட்டில் பல இன்ப துன்பங்களையும், சுக துக்கங்களையும், புதிய அனுபவங்கயைும், புதிய சிந்தனைகளையும் பெற்றிருக்கின்றோம். இவ்வனுபங்களை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்படும் உங்கள் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக, வெளியீடு செய்யவுள்ளோம்.

புலம்பெயர் வாழ்வியலில் தமிழினத்தின் அனுபவங்களையும், தடயங்களையும் பதிவாக்கி, எதிர்காலச் சந்ததியினர் பயன்பெறும் நோக்கமாகவே இக்கட்டுரைத் தொகுப்பு வெளிவர இருக்கின்றது. இப்பதிவுத் தொகுப்பில் தங்களது கட்டுரையும் இடம்பெற வேண்டுமென, மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்புக்காகத் தாங்கள் எழுதும் கட்டுரை A4 அளவில் கொண்ட தாளில் 5 அல்லது 6 பக்கங்களில் அமைந்திருப்பது நன்று. கட்டுரைகள் தனிநபர்களைப் புண்படுத்துவதாகவோ, இன, மத, அரசியற் குரோதங்களை ஏற்படுத்துவதாகவோ அமையக் கூடாது. கட்டுரைகளை 30.04.2014ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். கட்டுரைகளைக் கணனியில் பதிவு செய்து செயலாளரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தல் மிகவும் விரும்பத்தக்கதாகும்.

தங்களின் ஆக்கமும், ஊக்கமும் எமது சங்கத்திற்கும், சமூகத்திற்கும் பயன்பல அளிக்குமென நம்புகின்றோம். உங்கள் கருத்துக்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.ஆர்வமுள்ளவர்களுக்கு,அறிவித்தலை வழங்கி எழுதத்தூண்டுங்கள்.

தங்களின் எழுத்துப்பணி மேன்மேலும் வளர்ந்து சிறப்புப்பெற, எமது இனிதான நல்வாழ்த்துக்கள்!எழுத்தையும்,வாசிப்பையும் இருகண்களாகப்போற்றுவோம்.

நன்றி.

தலைவர்
வசிவராசா
v.sivarajah@arcor.de

செயலாளர்.
பொன். புத்திசிகாமணி
ponmani@hotmail.de

## மார்ச் – 8 !.

பங்குனி 8ம் தேதி உலகம் முழுவதும் சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்படுகின்றன. உரிமைவேண்டியும் அடக்குமுறைகளை உடைத்தெறியப் போராடிவரும் பெண்களுக்காகவும் வாழ்த்துவோம்.. வறுமையாலும் அடக்குமுறைகளாலும் பாலியல் கொடுமைகளாலும் பாதிப்புற்றுவரும் உலகப்பெண்களின் விடுதலைக்ககாக எழுதிக் கொண்டிருப்போம்.. பங்காற்றிச் செயற்படுவோம்!..

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நீதவான்

யாழ்-சுன்னாகத்தில் இயங்கிவருகின்ற வாழ்வகத்தின் (வலுவிழந்தோர் இல்லத்தின்) தலைவர் திரு .ரவீந்திரன் அவர்கள் இலங்கையின் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டார். அண்மையில் அவருக்குப் பாராட்டுவிழா நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்களாகும். இவர் விழிப்புலனற்றவர். ஆனால் ஒரு பட்டதாரி. இலங்கையில் முதலாவது விழிப்புலனற்ற சமாதான நீதிபதி என்பது குறிப்பிடத்தக்கதாகும்...












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகப்பணியில் எனது நண்பன்.

எனது நண்பன்..சிறந்த மேடைப் பேச்சாளர், சமூகசேவையாளர், வன்னியில் வாழ்ந்த காலத்தில் நாம் இருவரும் பல சமூக சேவைகளைப் புரிந்திருக்கிறோம். இன்றுவரை நானும் அவரும் தாய் மண்ணின் வாசம் மாறாமல் தாய்மண்ணுக்காக ஏதோ முடியுமான உதவிகளைப் புரிந்துகொண்டிருக்கிறோம். அந்த வகையில் என் நண்பன்.திரு. பா.விஜயகுலசிங்கம் (துவம்) அண்மையில் தாயகத்தின் பல இடங்களுக்குச் சென்று நேரடி உதவிகளைச் செய்து கனடா திரும்பியிருக்கிறார். நிதியாகவும் பொருளாகவும் பெரும் உதவிபுரிந்திருப்பது பாராட்டுக்குரிய விடையமாகும்.

ஆசிரியர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துவோம்!.


## 200 யூ ரோ அன்பளிப்பு!.

லண்டனில் வசிக்கும் திரு திருமதி ஜனார்தனன்-அனுஜா தம்பதிகளின் செல்வப் புதல்விகளான தனுஸ்கா, தஸ்மிகா ஆகியோர் தமது பிறந்தநாளைக் கொண்டாடியபோது தாயக ஆதரவற்ற சிறார்களுக்காக 200.00 யூரோக்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இச்செல்வங்களை நாமும் வாழ்த்துகிறோம். மனிதநேய உதவியைப்புரிந்த இவர்களின் பெற்றோர்களுக்கு நன்றியும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.



## 100 யூ ரோ அன்பளிப்பு!.

லண்டனில் வசிக்கும் திரு திருமதி பன்னீர்ச்செல்வன்-செல்வறஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வர்களான அருண், அவின் ஆகியோர் தமது பிறந்தநாளைக் கொண்டாடியபோது தாயக ஆதரவற்ற சிறார்களுக்காக 100.00 யூரோக்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இச்செல்வங்களை நாமும் வாழ்த்துகிறோம். மனிதநேய உதவியைப்புரிந்த இவர்களின் பெற்றோர்களுக்கு நன்றியும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப் பணிகளில் இணைந்து கரம்கொடுப்பவர்கள்.

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள்மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப் பேற்று உதவும் மனிதநேயப் பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம்.இதுவரை இத்திட்டத்தில்இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா) - 480-00 யூரோ
02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-மட்டக்களப்பு - 480-00 யூரோ
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி-சுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-கிளிசொச்சி - 480-00 யூரோ
04. செல்வன்.நகுல்.துரையரங்கன்-ஜேர்மனி.
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-திருகோணமலை- 480-00 யூரோ
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-வவுனியா - 480-00 யூரோ
06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-திருகோணமலை- 480-00 யூரோ
07. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு-வவுனியா - 480-00 யூரோ
08. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம்- ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
10. திருமதி.ஸ்ரெவ்வானி.அம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு -மட்டக்களப்பு)- 240-00 யூரோ
12. செல்வி.சுகிர்தா.தவராஜ் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவு-கிளிநொச்சி - 200-00 யூரோ
13. செல்வி.நந்தனா,செல்வன்.ராகுல்.குமரன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- மட்டக்களப்பு- 200-00 யூரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அன்பகம் சிறுவர் இல்லம்
# හින්දු අන්පහම ළමා නිවාසය
# Hindu Anpakam Children Home

Regd-No :NEP/DS/V/SS/111
: HA/04/V/24

2nd Mile Post, Mannar Rd,
Vepankulam, Vavuniya

President
Miss.K.Jeyarany

Vice President
Mr.N.Tharmarasah

Secretary
Mrs.S.Nirmala

Treasurer
Mr.K.Sabanathan

Asst. Secretary
Mr.J.Jegvan

Asst Treasurer
S.Subramaniyam

Auditer
Mr.T.Kurakulasingam

Legal Adviser
Mr.K.Thayaparan LL.B
(Col)

Board of Members
Mr.K.Kirupagaran
Mr.R.Tharmapalan
Mr.K.Nadarasasingam
Mrs.K.Leelawathy
Mr.V.Karthikesu
Mr. .Vijayaratnam
Mr.K.Tharmalingam
Mrs.K.Chandraleela
Mrs.J.Thadsajini

Patron
Mr.S.AThijakarajah
Mr.P.Sathiyanathan
Mr.V.Nadarajah

Account
032020254291
Hatton National Bank
Vavuniya

Conduct
024 222 3683
077 6143628
E.Mail
hinduanpakam@gmail.com

அன்புடையீர்!

வணக்கம்

எமது இல்லத்தில் 13 ஆண்பிள்ளைகளும், 41 பெண்பிள்ளைகளுமாக 54 பிள்ளைகள் உள்ளார்கள். உணவு, உடை, பராமரிப்பு, பாடசாலை செலவினங்கள் போன்ற இவர்களின் நாளாந்த செலவினங்களுக்கான உதவிகள் எமக்கு போதாமல் உள்ளது. அதனால் அவர்களின் அடிப்படை வசதிகளைக்கூட செய்யமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம்.

ஆகவே எங்களது பிள்ளைகளின் செலவினங்களை பொறுப்பெடுத்து உதவிசெய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.



உண்மையுள்ள

திருமதி.ச.நிர்மலா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ruth Mission

No.74, Jeyapuram North,
Kilinochchi

No: 031 8 - 1 - 2014

Received with Thanks the Sum of Rupees One hundred and fourty four thousend & seventy two Rs.

From Mr V. Sivarajah

On Account of Donation

Rs: 1,044,072/=

G. Jeyaratnam.
Director/Manager

---

உண்டியல்

## RECEIPT

**SRI AHILANDESWARY ARULAHAM**
Kovilkulam (Home for the orphans)
Vavuniya. T.P : 024 2221685

No. 10427

Date: 30/01/2014

Received with thanks from MR. V. SIVARAJAH.

Address MANN (ERDE) MAGAZIN - GERMANY

the sum of Rupees One Hundred Seventy Four Thousand Six Hundred Fourty Eight Cts

on account of [illegible]

Name of Bank [illegible] Branch [illegible] Cheque No.

Dated

**SRI AHILANDESWARY ARULAHAM**

Bank of Ceylon.

CASH
CHEQUE Rs. 174648/00

Manager

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அன்பகம் சிறுவர் இல்லம்
# හින්දු අන්පකම ළමා නිවාසය
# Hindu Anpakam Children Home

Regd No :NEP/DS/V/SS/111
: HA/04/V/24

2nd Mile Post, Mannar Rd,
Vepankulam, Vavuniya



01) முழுப்பெயர்......................-இல்லப்பெயர்-அஸ்வினி (பெயர் தெரியாது)

02) பிறந்த திகதி......................-அனுமதித்த போது (ஒன்றரை வயது)

03) நிரந்தர முகவரி......................தெரியாது

04) இணைந்த திகதி...............09.06.2012

05) யாரால் இணைக்கப்பட்டார்.- பொலிஸ் உத்தியோகத்தர்

சிறுவர் பெண்கள் பிரிவு வவுனியா.

06) எமது இல்லத்தில் இணைத்துள்ளதற்கான காரணம்....- சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் இணைத்துள்ளார்.

| No | Full Name | Date Of Birth | Post Code | Date Started | Sponsor Deatails |
|---|---|---|---|---|---|
| 3 9 | Asvini | | | | |

உண்மையுள்ள

[illegible]

செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதநேயப் பணியில் இணைந்து கொண்டவர்கள்
- 480.00 யூ ரோ -

மண் சஞ்சிகையால் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் தாயக ஆதரவற்ற சிறுவர்களுக்கு உதவுப்பணியில் ஜேர்மனி-எசன் நகரத்தைச் சேர்ந்த இளம் தம்பதியினர் திரு,திருமதி.ஸ்ரெவ்வானி-இம்மானுவல் ஆகியோர் முன்வந்திருப்பதைப் பாராட்டி வாழ்த்துகிறோம். வவுனியா -வேப்பங்குளம் இந்து அன்பகத்தில் வாழும் ஆரதரவற்ற சிறுமியான அஸ்வினி (இல்லப் பெயர்) அவர்களுக்கு வருடாவருடம் உதவ முன்வந்துள்ளனர். அதாவது இப்பிள்ளைக்கு வருடாவருடம் ஏற்படும் செலவுகளாக உணவு, உடை, மருத்துவம் , கல்வி, வதிவிடம், ஏனைய செலவுகளாக 480.00 யூரோக்களை வருடாவருடம் மண் சஞ்சிகையூடாக அன்பளிப்பு வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். (பொறுப்பெடுத்த பிள்ளையின் படம் மறுபக்கத்தில் காணலாம்) இந்த மனிதநேய உதவிக்காக இத்தம்பதியினரை மனமாரப் பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம்.

மண் சஞ்சிகையின் வாசகர்கள் இதுவரை தாயகத்திலுள்ள ஆதரவற்ற இல்லங்களில் வாழும் 13 பிள்ளைகளைப் பொறுப்பெடுத்து உதவி வருகிறார்கள். ஆகவே தெய்வத்தின் குழந்தைகள் என எண்ணுங்கள். எங்கள் பிள்ளைகள் என்று எண்ணுங்கள். நீங்களும் ஒரு பிள்ளைக்கு உதவ முன்வாருங்கள். மனிதநேயப் பணியில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள். அள்ளிக் கொடுக்காவிடின் கிள்ளியாவது கொடுங்கள்!...

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதிஉதவிக்கணக்கு (பங்குனி - சித்திரை - 2014)

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு 01.12.2013 | +1592-04 |
| அன்பளிப்புகள்:- | |
| 01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 02. திருமதி. ரதி சின்னத்துரை - London | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 03. செல்வி. பவித்ரா, செல்வன். விஷ்ணு-விஜயகௌரி-Swiss | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 04. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 05. செல்வி. அஜந்தி. அழகராசா - London | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 06. செல்வன். ஜெய்சன். ஜெயபாலன் - London | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 07. திருமதி. பராசக்தி. பரமாமி - London | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 08. செல்வன்.நகுல்.துரையரங்கன் - Essen | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 09. திருமதி.பிரிந்தாவனி. தனபாலசுந்தரம் - Weeze | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்) | |
| 10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen | +80-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு) | |
| 11. செல்விகள். தீபா. தர்மராசா, வினிஷா. ராஜ்குமார், - Gottingen | +40-00 |
| (ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 12.செல்வி.நந்தனா,செல்வன்.ராகுல்.கனகராசா-Munchengladbach | +30-00 |
| (ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | |
| 13. செல்வி.சுகிர்தா.தவராஜ் - Wadgassen | +30-00 |
| (ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | -------- |
| | 2492-04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | | | + 2492-04 |
| 14. செல்வி.தீபனா.சத்தியகுமார் (பிறந்தநாள் அன்பளிப்பு) | Krefeld | + 50-00 | |
| 15. திருமதி பவானி.மூர்த்தி (பிறந்தநாள் அன்பளிப்பு) | Swiss | + 100-00 | |
| 16. திரு.சாந்தலிங்கம்.சிவகுமாரன் | Pforzheim | + 20-00 | |
| 17. செல்வன்கள் அருண், அவின் .பன்னீர் (பிறந்தநாள் அன்பளிப்பு) | London | + 80-00 | |
| 18. செல்விகள் தனுஸ்கா,தஸ்மிகா .ஜனா (பிறந்தநாள் அன்பளிப்பு) | London | + 200-00 | |
| 19. திரு.இ.சிறிஸ்கந்தராசா | Duisburg | + 50-00 | |
| 20. திரு.லி.கிருபாகரன் | Duisburg | + 50-00 | |
| 21. திரு.பொ.பகீரதன் | Duisburg | + 50-00 | |
| 22. திரு.அ.ஆனந்தராசா | Duisburg | + 60-00 | |

(19,20,21,22 இலக்கத்துக்குரிய நால்வரும் டியூஸ்பேர் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் அன்பளிப்பு)

| | | |
|---|---|---|
| | + 660-00 | 660-00 |
| | | + 3152-04 |

அனுப்பியது:-

| | | |
|---|---|---|
| (1) இந்து அன்பகம் சிறுவர் இல்லம் வேப்பங்குளம் - வவுனியா | -690-00 | |
| (2) அருளகம் சிறுவர் காப்பகம் கோவிற்குளம் - வவுனியா | - 500-00 | |
| வங்கிக் கட்டணம் 2 X 35-00 | - 70-00 | |
| | - 1260-00 | -1260-00 |
| 15-03-2013 ல் மீதி கையிருப்பு | | + 1892-04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sis.G.J.Jeyaratnam
Ruth Mission
Jeyapuram,Kilinochchi
Sri Lanka

8/11/2014

அன்பின் இராஜா அவர்கட்கு,

அன்பின் அருமை நாதர் யேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஆண்டவர் அருளால் இங்கு யாவரும் நலம். உங்கள் நலம் அறிய ஆவல். நீங்கள் அனுப்பிய 2013க்குரிய மிஞ்சிய 10,44-072/= இலங்கைப் பணமாக கிடைத்தது. மிகவும் நன்றி. இத்துடன் பணத்திற்குரிய பற்றுச் சீட்டையும், பிள்ளைகளின் கடிதங்களும் (பூவிகா, தர்சிகா, நிவேதா) அதிகாரிகள் அவற்றை அனுப்பியுள்ளேன். கிடைத்ததும் பதில் தரவும்.

எமது பணிகளுக்காக இறைவனிடம் மன்றாடுவீர்கள். சென்ற வருடம் எமது திட்டங்களைக் குறித்து அறிவித்தோம். உங்களுக்குரிய விரும்புவோர் அறிக்கை கேட்டிருந்தீர்கள். நாங்கள் எமது அறிக்கையை அனுப்பியிருந்தோம். இதுவரை எதுவித பதிலும் இல்லை. தயவு செய்து எமக்கு கடிதம் செய்யுங்கள். தான் அதிகம் தேவைப்படுகிறது. காரணம் அநாதைகள் உயிர் பிழைத்திருக்க பற்றாக்குறை. இதனால் சேவை பாடசாலை இல்லை [illegible]. இதனால் [illegible] பல சேவைகள் [illegible]. தயவு செய்து அருகிய உங்களால் இயன்ற உதவிகளை உங்கள் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

Tuition [illegible]

[illegible] Jaffna [illegible]

[illegible] Jaffna [illegible]

[illegible]

நன்றி

இறை ஆசீர்!

இப்படிக்கு

இறை பணியில்

Sis. Gladys Jeyaratnam

Sis.G.J.Jeyaratnam
Ruth Mission
Jeyapuram,Kilinochchi
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்

# SRI AGILANDESHWARY ARULAHAM

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில்

ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUVARAR THIRUKOVIL

Kovilkulam,
Vavuniya. Sri Lanka
T.P : 0094 024 - 2221685
E.mail: arulaham@gmail.com

"இளம் சிறார்களை கருணை உள்ளத்துடன் பாதுகாப்போமாக"
"May we protect tender hearted children with compassion"

கோவில்குளம்,
வவுனியா, இலங்கை.

Banker: Bank of Ceylon - Vavuniya. A/C No. 0002364895 Reg No. NEP/PCC/CH/125

Patrons
Mr.K.Kanesh Govt.Agent Jaffna
Mr.A.Thiyagarasa, President,
(Nayinai Nagapoosani Amman Kovil)

Hony.President
Mr.M.Sabanathan (Prop: Neon Rice Mill)

Hony.Vice President
Mr.S.Ramamoorthy
(Prop: Thirusenthooran Rice Mill)

Hony.Secretary
Mr.A.Navaratnarajah Trustee
Arulmihu Agilandeshwary Sametha
Agilandesuvarar Thirukovil

Hony. Asst.Secretary
Mr.V.S.Thevarajah (Govt. Contractor)

Hony. Treasurer
Mr.S.Annalingam (Prop: Kugan Motors)

Committee Members
Mr.A.Umathevan (Prop: New Sun Rice Mill)
Mr.P.Murugaraj (Prop: Sellam Rice Mill)
Mr.S.Sripathynathan (Prop: Asokan Rice Mill)
Mr.N.Thanapalasingam (Trader)
Mr.S.Sureshkumar (Divisional Secretariat)
Mrs.T.Ramanathan

Administrator
Mr.R.Loganathan (Accountant)

January 30, 2014

திரு.வ.சிவராஜா அவர்களுக்கு,

மண் பத்திரிகை, ஜேர்மனி.

அன்புடையீர்,

**அபிராமி, தாட்சாயனி, ஆரணி, சத்தியா, சாம்பவி இவர்களின் பராமரிப்பு நிதி உதவி**

மேற்படி இல்லத்தில் பராமரிக்கப்பெற்றுவரும் சிறுமிகளான அபிராமி, தாட்சாயனி, ஆரணி, சத்தியா, சாம்பவி இவர்களின் பராமரிப்பு செலவை ஏற்று தங்கள் பத்திரிகை வாசகர்களிடம் இருந்து பெற்று இம்முறையும் அனுப்பி வைத்த பணம் 1000 யூரோ (174,648/-) நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

அபிராமி, தாட்சாயனி, ஆரணி, சத்தியா, சாம்பவி ஐவரும் உட்பட அனைத்து சிறார்களும் நலமாகவுள்ளனர். இத்துடன் தங்கள் அனுப்பிய பணத்திற்கான பற்றுச்சீட்டும் அகிலாண்டேஸ்வரப்பெருமானின் பிரசாதமும் அனுப்பி வைக்கின்றோம்.

தாங்கள் கேட்டுக்கொண்டவாறு இல்லத்திலுள்ள பிள்ளைகளின் ஆக்கங்களும், பராமரிப்பு சேவை கிடைக்கப்பெறும் சிறுமிகளின் கடிதங்களும் அனுப்பி வைக்கின்றோம்.

தங்களின் தொடர் உதவிக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, தாங்களும் பண அன்பளிப்பு செய்பவர்களும் வாசகர்களும் சகல செல்வங்களும்பெற்று பல்லாண்டுகாலம் நலமாக வாழ அகிலாண்டேஸ்வரப்பெருமான் அருள்புரிவாராக.

நன்றி

இங்கனம்

(ஆறுமுகம் நவரத்தினராசா)
Arumugam Navaratnarajha
Hon Secretary/Trustee
Sri Ahilandeshwary Arulaham
Kovilkulam, Vavuniya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்கால ஒலிம்பிக் - 2014

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நிறைவு முதலிடத்தில் ரஷ்யா ரஷ்யாவின் சோச்சி நகரில் 2014 தை 7ஆம் திகதி ஆரம்பமாகிய குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் மாசிமாதம் 7ம் திபதி நிறைவடைந்துள்ளன.

சுமார் 50 பில்லியன் யூரோக்கள் செலவில் வெகு பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விளையாட்டு போட்டிகள் தொடர்ந்து 16 நாட்கள் நடைபெற்றது.

2900 வீரர்-வீராங்கனைகள் போட்டியிட்ட இந்த போட்டியில் ரஷ்யா அதிக பதக்கங்களை வென்று பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளது.

அதன்படி 13 தங்கம், 11 வெள்ளி, 9 வெண்கலம் என மொத்தம் 33 பதக்கங்களை ரஷ்ய வீரர்- வீராங்கனைகள் கைப்பற்றியுள்ளனர் மிகுந்த எதிர்பார்ப்புடன் களமிறங்கிய அமெரிக்க விளையாட்டு வீரர் வீராங்கனைகள் பெரிதாக சோபிக்க முடியாமல் நோர்வே மற்றும் கனடாவுக்கு அடுத்த மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது.

11 தங்கம், 5 வெள்ளி, 10 வெண்கலம் என 26 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் இரண்டாம் இடத்தை நோர்வே தக்கவைத்து கொண்டது.

மேலும் 10 தங்கம், 10 வெள்ளி, 5 வெண்கலம் என 25 பதக்கங்களை பெற்ற கனடா மூன்றாவது இடத்தை பெற, நான்காவது இடத்தை 9 தங்கம், 7 வெள்ளி, 12 வெண்கலம் என 28 பதக்கங்களை வென்ற அமெரிக்கா பிடித்துள்ளது.

இதற்கு அடுத்த நிலைகளில் 8 தங்கம், 7 வெள்ளி, 9 வெண்கலம் என 24 பதக்கங்களை பெற்ற நெதர்லாந்தும், 8 தங்கம், 6 வெள்ளி, 5 வெண்கலம் என 19 பதக்கங்களை வென்ற ஜேர்மனியும், 6 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம் என 11 பதக்கங்களை கைப்பற்றிய சுவிட்சர்லாந்தும் உள்ளன.

நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட வண்ணமயமான வாணவேடிக்கைகளும், கண்கவரும் கலைநிகழ்ச்சிகளும் பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

**உலகில் கோடிக்கணக்கான ரசிகர்களைக் கொள்ளைகொள்ளும் உதைபந்தாட்டத்தின் கடந்த காலங்களில் தலைசிறந்த உலக வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பட்டியலை சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் வெளியிட்டுள்ளது. இப்பட்டியலை நோக்கினால்...**

## சிறந்த வீரன்: –

2003-Zinedine (Frankreich)) Real Madrid
2004-Ronaldinho (Brasilien) FC Barcelona
2005-Ronaldinho (Brasilien) FC Barcelona
2006-Fabio Cannavaro (Italien) Juventus - Turin
2007-Kaka (Brasilien) AC Mailand
2008-Cristiano Ronaldo (Portugal) - Mynchester United
2009-Lional Messi (Argentinien) - FC Barcelona
2010-Lional Messi " "
2011-Lional Messi " "
2012-Lional Messi " "
2013-Cristiano Ronaldo (Portugal) -Real Madrid

## சிறந்த பயிற்சியாளர் (ஆண்)

2010-Jose Mourinho (Portugal) - Inter Mailand/Real Madrid
2011-Pep Guardiola (Spanien) -FC Barcelone
2012-Vicente de Bosque (Spanien) -Nationalmannschaft
2013-Japp Heynckes (Germany) -FC Bayen Munchen

## சிறந்த வீராங்கனை: –

2003-Birgit Prinz (Germany) FC Frankfurt
2004-Birgit Prinz " "
2005-Birgit Prinz " "
2006-Marta (Brasilien) Umea-Schweden
2007-Marta " " "
2008-Marta " " "
2009-Marta " " "
2010-Marta " Gold Pride-USA
2011-Homare Sawa (Japan) Kobe
2012-Abby Wambach (USA) New York
2013-Nadine Angerer (Germany)

## சிறந்த பயிற்சியாளர் (பெண்)


2010-Silvia Neid (Germany) Nationalteam
2011-Norio Sasaki (Japan)) "
2012-Pia Sundhage (Schweden "
2013-Silvia Neid (Germany) "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WISSEN, KULTUR & LITERATUR
ZWEIMONATIGE AUSGABE
HTTP://WWW.MANN-ERDE.COM

ERDE
Mann

2014
GERMANY
AUSGABE 164

## எழுதிக்கொண்டேயிருக்கும் எஸ் . எம் . ஜி...!

தளிர்நடையாய்த் தொடங்கியின்று தரணியே வியக்கும் எழுத்து
தமிழனாய்ப் பிறந்தவுனை தமிழ்ப்பணியிலிருத்தியது கிழக்கு
வெளிர்வானமான இப்பூமியில் விரிந்துநீண்ட இருளினைநீக்க
வேதனைகளையே உதறிவிட்டு நீ வியர்வையைச் சிந்தியதற்கு
குளிர்விழிகள் கொண்டு குதூகலிக்கும் வண்ணமாயின்னும்-இக்
குவலயம் உனை வாழ்த்தாததுபெரும் குற்றமென்று நானுரைப்பேன்..!

மொழியின்மேல் மோகமும் முரண்பாடு இல்லாத முழுஈடுபாடும்
முறையான உனது வாழ்வினை முன்னிலையில் உயர்த்தியதே
அழிவின்சுவட்டில் எம் அன்னைபூமியினை ஆக்கியவர்கள்முன்
அடிபணியது உழைத்தவுனை அடைத்துவைத்து குதூகலித்து
பழிபாவாங்கிட புரட்சியாளனென்று பாரியகுற்றம் சுமத்திய-இந்தியப்
படை கைதுசெய்து பணியவைக்கச் சிறையிலிட்டது வேதனையே..!

உளிகொண்டு சிற்பமாய் இவ் வுலகத்தைச் செதுக்கும்வகையில்
ஊறுகள் நேர்ந்தபோதும் நீயோ உறுதியாகவே நின்றுழைத்தாய்
பிழிகின்ற சோகங்களெல்லாமுனைப் பின்தொடர்ந்து வந்தபோதும்
பேனாவின் பிடியைத்தளர்திடாது பத்திரிகைகளை நீவெளியிட்டாய்
வழிகின்ற குருதி மண்ணில் வரம்புகளைத் தாண்டினாலும்-உன்
வரைகின்ற பணியினை வற்றிடாது காத்தமையால் வாழ்த்துகிறேன்..!

தொழிலாகக் கடமையாகத் தொடங்கிவிட்ட உன் பயணமின்னும்
தொய்திடாமல் இன்றுவரைத் தொடருவதால் வாழ்த்துகின்றேன்
வெளிநாட்டுப் பயணம் செய்து விரிந்தவுன் ஆற்றல்களைக்கண்டு
விழாவெடுத்த தமிழ் எழுத்தாளர்சங்கத்தை விரும்பிப் பாராட்டுகிறேன்
மொழியோடும் நேயத்தோடும் முனைப்போடு சிறப்புச்செய்யும்-எம்
முன்னணிச் சஞ்சிகை மண்ணை மழுமனதாயிங்கு வாழ்த்துகிறேன்..!

-அம்பலவன்புவனேந்திரன்..



வருட சந்தா ஜேர்மனி 15€
ஏனைய நாடுகள் 20€

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org